Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET
BROWSING CENTRE
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை.
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. Road, Jaffna. T.P. 021-2222670, 2223588
Fax - 2223214, Email-del ~smskr@eureka.lk
(சி-1037)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆனி 12 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.ஆகிர் 26 (27.06.2003) வெள்ளிக்கிழமை இதழ்: 268

# அரசின் வரைபு இரு வாரங்களுக்குள் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்படும்!

## அமைச்சர் பீரிஸ் செய்தியாளர் மாநாட்டில் அறிவிப்பு

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இடைக் கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை அமைப்ப தற்கான வரைபு ஒன்றை அரசாங்கம் ஏற்க னவே தயாரித்துள்ளது- இவ்வாறு, அரசியல மைப்பு விவகார அமைச்சரும், விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைக ளுக்கான அரசாங்கத் தூதுக்குழுவின் தலை வருமான, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித் திருக்கின்றார்.

இந்த யோசனைகள் இரண்டு வார காலப் பகுதிக்குள் விடுதலைப் புலிகளின் பரிசீல னைக்காகச் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் லண் டனுக்குச் சென்றிருந்த அமைச்சர் பீரிஸ் கொழும்பு திரும்பியதையடுத்து, நேற்று கொழும்பில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முட் டுக்கட்டை (10 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் புலிகளின் பகுதிக்குள் ஊடுருவிய 30க்கும் அதிக படையினர்!

## தடுத்து நிறுத்திய போராளிகள் கண்காணிப்புக்குழுவுக்கு புகார்

(திருகோணமலை)

திருகோணமலை- கிண்ணியா பகுதியை அண்டிய விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட் டுப் பிரதேசத்தினுள் அத்துமீறி நுழைந்த இராணுவத்தினர், விடுதலைப் புலிகளால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

நேற்று நண்பகல், கிண்ணியாவில் குரங்கு பாஞ்சான் பகுதியில், இந்தச் சம்பவம் நடை பெற்றது. இதுதொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

நேற்று நண்பகலளவில்- விடுதலைப் புலி களின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் 30க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் ஆயுதங்களுடன் நுழைந்தனர்.

இவர்கள், விடுதலைப் புலிகளால் சுற்றி வளைக்கப்பட்டதுடன், உடனடியாகவே தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து வெளியேறு மாறு புலிகளால் கோரப்பட்டனர்.

விடுதலைப் புலிகளின் இந்தக் கோரிக் கையை (10 ஆம் பக்கம் பார்க்க)

# வரலாறு காணாத எழுச்சியுடன் இன்று 'பொங்கு தமிழ்' நிகழ்வு!

## யாழ்.பல்கலை மருத்துவ பீட மைதானத்தில் நான்கு திசைகளிலிருந்து பேரணிகள் சங்கமம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.குடாநாட்டின் வரலாற்றில் என்றுமில்லாத வகையில், மிகவும் உணர் வெழுச்சியுடன் 'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.**

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெறவி ருக்கும் இந்த மக்கள் எழுச்சி நிகழ் வில் லட்சக்கணக்கான மக்கள் ஒன்று திரண்டு 'எமது நிலம் எமக்கு வேண் டும்' என்ற தமது ஒருமித்த உணர்வை உலகுக்கு வெளிப்படுத்தவுள்ளனர்.

இன்றைய நிகழ்வின் ஆரம் பத்தில் பல்கலைக்கழகத்தை அண் டிய நான்கு முக்கிய சந்திகளிலிருந் தும் அணிதிரண்டுவரும் மக்கள் பேரணிகள் மருத்துவ பீட மைதா னத்தை வந்தடைந்ததும், 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வு ஆரம்பமா கும்.

திருநெல்வேலிச் சந்தி, பரமேஸ் வராச் சந்தி, கலட்டிச் சந்தி, கொக் குவில் சந்தி ஆகிய இடங்களிலி ருந்து ஆரம்பமாகும் ஊர்வலங்கள், மைதானத்தைச் சென்றடையும். இதன்போதான வீதி ஒழுங்குகள் (10 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ புலனாய்வாளர் கொலைகள்; ஆதாரமின்றி புலிகளை சாடமுடியாது!

## நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க் கருத்து

இராணுவப் புலனாய்வுப் பிரிவி னர் மீது சமீபகாலமாக இடம்பெறும் கொலைகள் கண்டிக்கத்தக்கவை தான். ஆனால், அதனை விடுத லைப் புலிகள்தான் செய்கின்றார்கள் என்பதை ஆதாரங்கள் இன்றிக் கூற முடியாது என, கொழும்பிலுள்ள தற் காலிக நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க் தெரிவித்துள்ளார்.

நோர்வே தூதுவராக கடமை யாற்றிவந்த ஹான்ஸ் பிரெட்ஸ்கர் தனது குடும்பத்தாருடன் அமெரிக்கா சென்றிருப்பதைத் தொடர்ந்து தற்கா லிக நோர்வேத் தூதுவராக பொறுப் பேற்றுள்ள வெஸ்ட்பேர்க்-

தெஹிவளையில் பொலிஸ் புல னாய்வுப் பிரிவு அதிகாரி சுட்டுக் கொல்லப்பட்டதற்கு விடுதலைப் புலிகள் மீது அரசாங்கம் சார்பில் அமைச்சர் பீரிஸ் நேற்று செய்தி யாளர் மாநாட்டில் விசனம் தெரி (10 ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சர் சந்திரசேகன் உட்பட முக்கிய பிரமுகர்கள் பங்கேற்பு!

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறவிருக்கும் 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வில் தென்னிலங்கையிலிருந்து அமைச் சர் சந்திரசேகரன் உட்பட முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொள்ள வுள்ளனர்.

இதேவேளை - தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப் பினர்கள் மற்றும் பிரமுகர்களும், ஐக்கிய தேசியக் கட்சியினைச் சேர்ந்த அமைச்சர் மகேஸ்வரனும் இன்றைய நிகழ்வில் பங்கேற்கவுள் ளனர்.

இந்நிகழ்வில், கலந்து கொள் வதற்காகவும் செய்திகளைத் திரட் டிக் கொள்வதற்கும் தென்பகுதி யில் இருந்து பத்திரிகையாளர்கள் பலரும் இன்று யாழ்ப்பாணத்திற்கு (10 ஆம் பக்கம் பார்க்க)



கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ள திடீர் வீதிச் சோதனையில் வானொன்றினை மறித்த படையினர் சோதனை மேற்கொள்கின்றனர்.

# பொங்கு தமிழுக்கு படையினர் இடையூறாக இருக்கமாட்டார்கள்!

## பிரதிப் பொலிஸ் மா அதிபர் விதாரண உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நிகழவிருக்கும் 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுக்கு பொலிஸாரும், இராணுவத்தினரும் எந்த வகையிலும் இடையூறாக செயற்படமாட்டார்கள் என்று அவர் கள் தரப்பிலிருந்து உறுதி வழங்கப் பட்டிருக்கிறது.

வடபகுதிக்கான பிரதிப் பொலிஸ் மா அதிபர் விதாரணவுடன் - மனித நேய அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகளும், யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியப் பிரதி நிதிகளும் நடாத்திய பேச்சுவார்த் தைகளின்போதே, மேற்படி உறுதி மொழி வழங்கப்பட்டிருக்கிறது.

மனித நேய அமைப்புக்களின் சார்பில் பரமநாதன், வணபிதா பேணாட் மற்றும் பல்கலை மாணவர் ஒன்றியத் தலைவர் பகீரதன், செய லாளர் செந்தூரன் ஆகியோர்- தெல் லிப்பளையில் பிரதிப் பொலிஸ் மா அதிபரைச் சந்தித்து - 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழவில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## 'பொங்கு தமிழ்' நிகழ்வு புலிகளின் குரலில் நேரடி ஒலிபரப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று யாழ்ப்பாணத்தில் நடை பெறவிருக்கும் 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வை முன்னிட்டு 'புலிக ளின் குரல்' வானொலி விசேட நேரடி ஒலிபரப்பை மேற்கொள்ளவுள் ளது.

மாலை மூன்றரை மணி முதல் இரவு பத்து மணிவரை நடைபெறவி ருக்கும் மேற்படி விசேட ஒலிபரப்பில் (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும்
உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 2223891 071 349999 071 348888
074 - 512666 - 01 - 360290
(சி-975)

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு இடையிலான

## கராத்தே சுற்றுப்போட்டி - 2003

*காலம்* :- 28.06.2003, சனிக்கிழமை

*நேரம்* :- காலை 9.00 (புதிய நேரம்)

*இடம்* :- யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அலகு

➤ போட்டியாளர்கள் தங்கள் பட்டிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழுடன் சமுகம் தரவும்.

அனைத்து ஆவலர்கள், அன்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உடற்கல்வி அலகு,
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

கராத்தே அணி,
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

அனுசரணையாளர்கள்-

SHARP Browns &com. 89, stanley Road, Jaffna

YASO MOTORS 161, stanley Road, Jaffna.

JUSMIR TRADERS 40, k.k.s. Road, Chunnakam.

ஊடக அனுசரணை

நமது ஈழநாடு



## முனை கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

பொங்குவோம் !
புறப்படுவோம்!!
எமது உரிமைக்கு
குரல் கொடுப்போம்.
'பொங்கு தமிழ்' நிகழ்வில்
எமது பலத்தை உலகிற்கு
பறைசாற்றுவோம்

கடற்கரை வீதி.
பருத்தித்துறை. (சி-1123)

தலைவரும்.
நிர்வாகத்தினரும்.



## வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

நாம் ஊர் புக வேண்டும்
எதிரிப்படை விலக வேண்டும்
நிரந்தர அமைதியுடன் சுயகௌரவத்துடன்
எமது மண்ணில் நாம் வாழ வேண்டும்
எமது நிலம் எமக்கு வேண்டும்
எமது மண்ணில் எதிரி குடிகொள்ள
நாம் அகதிமுகாமிலா ?

வேண்டும் எமது நிலம்

பருத்தித்துறை. (சி-1120)

தலைவரும்,
நிர்வாகத்தினரும்.



## பருத்தித்துறை நகர கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

"எமது நிலம் எமக்கு வேண்டும்"

பொங்கு தமிழில் ஓங்கிக்
குரல் கொடுப்போம்

பருத்தித்துறை. (சி-1121)

தலைவரும்,
நிர்வாகத்தினரும்.


# சின்னஞ்சிறு செய்திகள்

### பேதுருவானவர் ஆலய வருடாந்த பெருவிழா!

கொடிகாமம், கச்சாய் வீதி, புனித பேதுருவானவர் ஆலய வருடாந்த பெருவிழாவிற்கு, ஆயத்தமான நவ நாள் வழிபாடுகள் கடந்த 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித், தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இறுதி நவநாள் 'நற்கருணை விழா' நாளை சனிக்கிழமை மாலை நடைபெறும்.

புனிதரின் பெருவிழாத் திருப்பலி, யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபர், அருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.

திருப்பலியைத் தொடர்ந்து புனிதரின் திருச்சொரூபப் பவனியும், ஆசீரும் இடம்பெறவுள்ளது.

### ஆலய மகோற்சவம்

(கரவெட்டி)

கரவெட்டி சிந்தாமணி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் அடுத்த மாதம் 4 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் 12 ஆம் திகதி சனிக் கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது.

### நெடுந்தீவில் விளையாட்டு விழா

(நெடுந்தீவு)

நெடுந்தீவு விளையாட்டுக் கழகங்களின் சமாசம் நடத்திவரும் விளையாட்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வும், பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்கு குதிரையோட்டப் போட்டியுடன் ஆரம்பமாகி கயிறிழுத்தல், முட்டி உடைத்தல், தலையணைச் சண்டை, கிரீஸ் கம்பம் ஏறல், கைக்கொடிச்சவாரி, வயோதிபர் ஓட்டம் என்பனவும், சிறப்பு நிகழ்வாக வன்னி அணிக்கு எதிராக நெடுந்தீவு அணி மோதும் உதைபந்தாட்டப் போட்டியும் இடம்பெறவுள்ளது. (113)

### குடும்பநல சுகாதார ஆசிரியர் பயிற்சி செயலமர்வு

(ஆழியவளை)

குடும்பநல சுகாதார செயற்றிட்ட ஆசிரியர் பயிற்சி அடுத்த மாதம் 1ம், 2ம் திகதிகளில் நல்லூர் சாதனா மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் விஞ்ஞானம், சமூகக்கல்வி, சுகாதாரமும் உடற்கல்வி, வாழ்க்கைத் தேர்ச்சி ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் நான்கு பாட ஆசிரியர்களையும் இப்பயிற்சியில் கலந்து கொள்ளுமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறி வித்துள்ளார்.

செயலமர்வில் கலந்து கொள்ளும் ஆசிரியருக்கு நாள் ஒன்றிற்கு 300 ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. (122)

### முன்பள்ளி மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன், முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தினால் வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பளை ஆகிய பிரதேசங்களில் செயற்படும் 190 முன்பள்ளிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கடந்த செவ்வாய்க்கிழமை, இராமநாதன் கல்லூரியில் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய இணைப்பாளர் ஹேமமாலினி தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் - வலயக் கல்விப்பணிப்பாளர் றெஜினா இருதயநாதன், தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் எஸ்.ஜெயராஜ், முன்பள்ளி மேம்பாட்டு நிலையத் தலைவர் சிவனேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு பழமரக்கன்றுகள் விநியோகம்

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, சூழலைப் பாதுகாப்பதற்கான பழமர நாற்றுக்கள் வழங்கும் நிகழ்வு, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வு கடந்த செவ்வாய்க் கிழமை - கைதடி, சாவகச்சேரி, கீரிமலை, தொல்புரம் ஆகிய கமநல அபிவிருத்தி நிலையங்களின் கீழ் உள்ள கிராமங்களில் இடம்பெற்றன. மொத்தமாக, 1100 தென்னை நாற்றுக்களும், 150 மாதுளை நாற்றுக்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சம்பந்தப்பட்ட கமநலசேவை நிலையங்களின் பெரும்பாக உத்தியோகத்தர்கள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ்.மாவட்டப் பொறுப்பாளர், கிராம அலுவலர்கள், திட்ட இணைப்பாளர்கள் ஆகியோர் பங்குபற்றி மரக்கன்றுகளை விநியோகித்ததுடன், சூழற் பாதுகாப்பு மரநடுகை தொடர்பான கருத்துக்களையும் வழங்கினர்.

### நூல் வெளியீடு

(நவிண்டில்)

குப்பிளான் ஐ.சண்முகனின் அறிமுகங்கள் விமர்சனங்கள் குறிப்புக்கள் நூல் வெளியீட்டுவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் அதன் அதிபர் செ.சேதுராஜா தலைமையில் நடைபெறும்.

தொடர்ந்து, வடமராட்சி வலய கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் நிகழ்த்துவார். (116)


## கண்ணாடி இழைப்படகு உற்பத்தி நிறுவனம்

பொங்கு தமிழுக்குப் புறப்படுவோம்
ஒன்றெனத் திரண்டு நின்று
எமது ஆசைகளை
படையல் செய்வோம்
உலகின் முன்பாக!

வெளிச்ச வீட்டடி.
பருத்தித்துறை. (சி-1122)

தொழிலதிபரும்
ஊழியர்களும்.



## பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

ஒரே தலைமையின் கீழ் அணிதிரண்டு
பொங்கு தமிழ் நிகழ்வை
யாழ். பல்கலை வளாகத்தில்
சிறப்பாக்குவோம்.

தமிழ் பேசும் மக்களின்
உள்ளத்தில் எழும் உணர்ச்சியின்
வெளிப்பாடாய் எமது தலைமையை
வலிதாக்குவோம்.

(சி-1119)

முதலாம் குறுக்குத்தெரு வீதி.
பருத்தித்துறை.

தலைவரும்
பணியாளர்களும்.


## நல்லூர் பிரதேச சபை

### ஆதனவரி அறிவித்தல் 2003 நல்லூர்/கொக்குவில் உப அலுவகங்கள்

**2003 ஆம் ஆண்டு 2 ஆம் கந்தாயங்களுக்கான ஆதனவரியை 30.06.2003 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்பாக, எவ்வித தண்டமும் இன்றி இவ்வலுவலகத்தில் செலுத்தலாமெனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ் விவரப்படி தண்டப்பணம் அறவிடப்படும்.**

| | |
|---|---|
| வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் | - 15% |
| ஏனைய காணிகள் | - 20 % |

**நிலுவை உட்பட 2003 ஆம் ஆண்டுக்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த நிலுவை செலுத்தாத பட்சத்தில் 1987 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டம் இல:134(5) இன்படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்டு அறிவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.**

*நல்லூர் பிரதேச சபை,*
*திருநெல்வேலி,*
*26.06.2003* (சி-1124)

செல்லையா செல்வரத்தினம்.
செயலாளர்.
நல்லூர் பிரதேச சபை

## மிலிந்த லண்டனிலிருந்து அமெரிக்காவுக்கு பயணம் !

(லண்டன்)

பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான கைத்தொழில் அமைச்சர் மிலிந்த மொறகொட, நேற்றுமுன்தினம் லண்டனிலிருந்து அமெரிக்காவுக்குப் பயணமானார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன், லண்டனில் பல்வேறு சந்திப்புக்கள் மற்றும் பேச்சுக்களில் பங்குபற்றிய மிலிந்த மொறகொட, அங்கிருந்து நேற்றுமுன்தினம் வொஷிங்ரனுக்குப் புறப்பட்டுச்சென்றார்.

அவர், அமெரிக்க அதிகாரிகளுடன் பல்வேறு விடயங்கள் குறித்துப் பேச்சுக்களை நடத்தவிருப்பதாக, அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன. அமைச்சர் மிலிந்த மொறகொட இந்தவார இறுதியில் நாடு திரும்புவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### மாவிட்டபுரம் உற்சவம்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில சுபானு வருஷ காம்யோற்ஸவம் அடுத்தமாதம் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 28 ஆம் திகதி ஆடி அமாவாசை வரை நடைபெறவுள்ளது.

27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் ஆடி அமாவாசைத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

# அரசாங்கத்துக்கு பாலசிங்கம் எழுதிய கடிதம் குழப்பத்தையும், கோபத்தையும் ஏற்படுத்துகின்றது

## லக்ஷ்மன் கதிர்காமர் சீற்றம்



(கொழும்பு)

புலிகளின் சார்பாக அரசாங்கத்துக்கு, அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய கடிதத்தை மீண்டும் மீண்டும் பார்க்கும்போது, அவை தன்னைக் குழப்பத்துக்கும், கோபத்துக்கும் உள்ளாக்குவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

அன்ரன் பாலசிங்கத்தின் கடிதத்தின் மொழிநடை, இறைமையுள்ள ஒரு அரசாங்கத்துக்கு எழுதுவது போன்று அமையவில்லை.

பொதுவாக, சமாதான முயற்சிகளில் ஈடுபடுவோர் எழுதும் கடிதங்களின் வார்த்தைகளில் மென்மையும், நளினமும் கடைப்பிடிக்கப்படுவது வழமை.

ஆனால், பாலசிங்கம் எழுதிய கடிதத்தில், இந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னர் வெளியிட்ட தீர்வுத் திட்ட யோசனைகளில், இடைக்கால நிர்வாகத்தைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்ததாக, பாலசிங்கத்தின் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகாவின் தீர்வுத்திட்டத்தில் இடைக்கால நிர்வாகம் என்பது இறுதித்தீர்வை நோக்கியதாகவே இருந்தது. இடைக்காலம் என்ற பதம் இறுதி என்பதற்கு எதிர்மாறான பதமாகும். இடைக்கால நிர்வாகம், இறுதித் தீர்வுக்காக நகரும் பாதையாகும்.

தனியான இராணுவம், கடற்படைப் பிரிவுகளை வைத்துக்கொண்டு இடைக்கால நிர்வாகத்தை அமுல்படுத்த முடியாது. அத்தகைய நிலை அரசுக்கு ஆபத்தானது.

புலிகளிடம் இராணுவ, கடற்படைப் பிரிவுகள் உள்ளன என்பதை உலகம் அறியும். இந்த நிலையில்- இடைக்கால நிர்வாகம், இந்த இராணுவ, கடற்படைப்பிரிவுகளைச் சட்டபூர்வமாக்கவே இடமளிக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.







அரசாங்கத்துக்கு எதிராக ஜே.வி.பியினர் நேற்று முன்தினம் கொழும்பு ஹைட்பார்க்கில் நடத்திய பேரணிக்கு விமல் வீரவன்ச தலைமை தாங்கிச் செல்வதை முதற்படத்திலும், பேரணியில் பங்கு கொண்ட பௌத்த பிக்குகளில் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு பிரிட்டிஷ் எதிர்க்கட்சி ஆதரவு வழங்கும்!

## பிரதமர் ரணிலிடம் நேரில் தெரிவிப்பு



(லண்டன்)

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் அளித்துவரும் ஒத்துழைப்புக்கு, தமது கட்சி முழுமையான ஆதரவை வழங்கும் என்று, பிரிட்டனில் எதிர்க்கட்சியான கொன்சர்வேட்டிவ் கட்சி தெரிவித்துள்ளது.

கொன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் டங்கன் சிமித்தைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நேற்றுமுன்தினம் லண்டனில் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இந்தச்சந்திப்பின்போது, இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் குறித்தும், அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்தும், சர்வதேச சமூகத்தின் ஆதரவு குறித்தும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெளிவாக எடுத்து விளக்கினார்.

இதையடுத்து, பிரிட்டிஷ எதிர்க்கட்சித் தலைவர் டங்கன் சிமித்-

இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்டும் முயற்சிக்கு, உதவும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு தாம் பூரண ஆதரவு வழங்குவதாக தெரிவித்தார்.

இதேவேளை - லண்டனில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேச்சு நடாத்தினார்.

இந்தச் சந்திப்பின்போது, சமாதான முயற்சிகள், அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் தொடர்பாக, ஆராயப்பட்டன. இந்தச் சந்திப்பையடுத்து, எதிர்வரும் நவம்பர் மாதம் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு வொன்று இலங்கைக்கு வந்து, நிலைமையை ஆராய்வதென்றும் முடிவாகியுள்ளது.

லண்டனில் தங்கியுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நேற்றுமுன்தினம் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் - டொன் மக்கினனையும் நேற்றுமுன்தினம் சந்தித்து பேச்சு நடத்தினார்.

இதன்போது, இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு, பொதுநலவாய நாடுகள் அமைப்பு பூரண ஆதரவு வழங்கும் என்றும், எத்தகைய உதவிகள் இலங்கைக்குத் தேவையாக உள்ளன என்பது குறித்து, விபரமான அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம், டொன் மக்கினன் தெரிவித்தார்.

# பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு இவ்வருட இறுதியில் புதிய திட்டம்!

## அமைச்சர் லொக்குபண்டார தகவல்

இலங்கையில் வேலையற்றிருக்கும் 18 ஆயிரம் பட்டதாரிகளுக்கு, தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தக்கூடிய திட்டமொன்று, அரசினால் - இந்தவருட இறுதியில் முன்வைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார, பதுளை மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

தொழில் வாய்ப்பின்றியிருக்கும் பட்டதாரிகளின் எண்ணிக்கை, நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது. இதைக் கட்டுப்படுத்தவே இந்தத் திட்டம் கொண்டுவரப்படவுள்ளது என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# கோபி அனானுக்கு முறையிடச்செல்லும் பொ.ஐ.மு. குழுவுக்கு அனுரா தலைமை!

தென்னிலங்கையில் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் தொடர்ச்சியாகப் படுகொலை செய்யப்பட்டு வருவது குறித்து, ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் கோபி அனானிடம் முறையிடுவதற்காக, பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமெரிக்காவுக்குச் செல்லவுள்ளனர்.

இந்தக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான - அனுரா பண்டாரநாயக்க, தினேஷ் குணவர்த்தன, மங்கள சமரவீர ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

சமீபத்தில் தென்மாகாணசபை உறுப்பினர் 'சண்டி மல்லி' - மேல் மாகாணசபை உறுப்பினர் 'சுனில் மெண்டிஸ்' ஆகியோர் படுகொலை செய்யப்பட்டதையடுத்தே, பொது ஜன ஐக்கிய முன்னணி இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது.

தொடர்ச்சியாக எதிரணி அரசியல்வாதிகள் படுகொலை செய்யப்படுவது குறித்தும் - இந்தப் படுகொலைகள் தொடர்பாக அரசாங்கம் உரிய நடவடிக்கைகள் எடுக்கத்தவறியுள்ளது குறித்தும், இவர்கள் ஐ.நா. செயலாளரிடம் முறையிடவுள்ளனர்.



# சம்பள உயர்வு சுற்றறிக்கையை அமைச்சரவை அங்கீகரித்தது!

## மருத்துவ அதிகாரிகளின் போராட்டம் முடிவுக்குவந்தது

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினரின் கோரிக்கைக்கு அமைவாக, சம்பள அதிகரிப்பு வழங்கும் சுற்றறிக்கையை- அமைச்சரவை நேற்றுமுன்தினம் அங்கீகரித்தது.

இந்தச் சுற்றறிக்கையின்படி, சம்பள அதிகரிப்பு அடுத்தமாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

வைத்திய அதிகாரிகளுக்கான சம்பள நிலுவைகள் - 2005 ஆம் ஆண்டுக்கு முன் பகுதிபகுதியாக வழங்கப்படும் எனவும், இந்தச் சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, அமைச்சரவையினால், வைத்திய அதிகாரிகளின் சம்பள முரண்பாட்டை நீக்கும் சுற்றறிக்கை அங்கீகரிக்கப்பட்டதையடுத்து, தமது வேலை நிறுத்தப் போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்படுவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் உதித்த ஹேரத் அறிவித்துள்ளார்.

தமது சம்பள முரண்பாடுகளைத் தீர்க்குமாறுகோரி, அரசாங்க மருத்துவ அதிகாரிகள், ஒன்பது நாட்கள் மேற்கொண்ட வேலைநிறுத்தத்தால், மருத்துவ சேவைகள் பெரிதும் சீர்குலைந்தன.

அதையடுத்தே அரசாங்கம் -மருத்துவர்களின் சம்பள முரண்பாடுகளைத் தீர்க்கும் சுற்றறிக்கையை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு - மட்டு ரயில் சேவை மீண்டும் ஜூலை 1 ஆம் திகதி முதல்!

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து மட்டக்களப்புக்கான நேரடி ரயில் சேவைகள், அடுத்தமாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இதுவரை வாழைச்சேனைவரை இணைப்பு ரயில் சேவையாக இடம் பெற்றுவந்த இந்தச்சேவை, நேரடி ரயில் சேவையாக - கொழும்புக்கும், மட்டக்களப்புக்கும் இடையில் மேற்கொள்ளப்படவுள்ளது.

அடுத்தமாதம் முதலாம் திகதி இரவு 8.30 மணிக்கு முதலாவது ரயில், கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து புறப்படும். மட்டக்களப்பிலிருந்து முதலாவது ரயில் மறுநாள் 2 ஆம் திகதி இரவு புறப்படும் எனவும், ரயில்வேத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

# 'பொங்கு தமிழ்' நிகழ்விற்கு அணிதிரண்டு வாருங்கள்!

## வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் அழைப்பு

மக்களின் மீள்குடியமர்வுக்கு, சர்வதேச ஆதரவைக்கோரி - இன்று நடைபெறும் 'பொங்கு தமிழ்' நிகழ்வில் வர்த்தகர்கள் அனைவரையும் ஒன்றுதிரண்டு பங்கேற்குமாறு, யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் அழைப்புவிடுத்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின், நடைபெற்ற பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படாததால், தற்போது பேச்சுவார்த்தை தொடரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் - பொதுமக்களின் வாழ்க்கையில் இயல்புநிலை ஏற்படுத்துவது, மக்கள் வாழ்விடங்கள், கோவில்கள், பொது இடங்கள், பாடசாலைகள் ஆகியவற்றிலிருந்து படைகளை விலகிக்கொளவது, மக்களின் மீள்குடியேற்றம் என்பன முக்கியமானவையாகும்.

ஆனால், 16 மாதங்கள் கடந்த பின்பும் - அவை பூரணமாக அமுல்படுத்தப்படவில்லை. மேலும், அதி உச்சப் பாதுகாப்பு வலயம் எனக் கூறப்பட்ட யாழ். குடாநாட்டின் மூன்றில் ஒரு பகுதி படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால், அந்த இடங்களில் இருபது வருடங்களுக்கு முன், தமது சொந்த இடங்களில் வசித்தவர்கள் தற்போது அகதிகளாக இடம்பெயர்ந்து வாழ்கின்றார்கள்.

மக்களின் மீள்குடியமர்வுக்கு சர்வதேச ஆதரவைக்கோரி, இன்று நடைபெறும் 'பொங்கு தமிழ்' நிகழ்வில், தமிழ்மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் முகமாக - யாழ். மாவட்டத்திலுள்ள சகல வர்த்தக சங்கங்களைச் சேர்ந்த வர்த்தகப் பெருமக்களும், வர்த்தக நிலையங்களை முழுமையாகப் பூட்டி - ஒன்று திரண்டு 'பொங்கு தமிழ்' நிகழ்வில் பங்குபற்ற அழைக்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆலயக் குருக்கள் வீட்டில் பட்டப்பகலில் நடந்த திருட்டு!

(சுன்னாகம்)

சுன்னாகம் - மயிலணி வடலி அம்மன் ஆலயத்திற்கு அண்மையிலுள்ள குருக்கள் வீட்டில், பட்டப் பகலில் நகை, பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

கடந்த வாரத்தில் ஆலயக்குருக்களும், மனைவியும் திருமண வீட்டிற்குச் சென்றிருந்த சமயம் பார்த்து, கதவைத் திறந்து வீட்டிற்குள் சென்ற திருடர்கள் - காப்பு, மோதிரம் தோடு, சங்கிலி, பணம் உட்பட சுமார் ஒரு இலட்சம் பெறுமதியான பொருட்களைத் திருடிவிட்டு, மீண்டும் கதவை முன்பிருந்தவாறே பூட்டிவிட்டுச் சென்றுள்ளனர்.

திருமண வீட்டிலிருந்து திரும்பிய குருக்களும், மனைவியும் வீட்டைத் திறந்து, உள்ளே சென்றபோதே திருட்டு இடம்பெற்றதை அறிந்து கொண்டனர். இந்தத் திருட்டுச் சம்பந்தமாக, சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது. (101)


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

இரண்டாவது அகவையில்



பெயர் - சா. டினுஷாந்தன்
முகவரி - அசோக் இல்லம், கட்டப்பிராய், யாழ்ப்பாணம்.

நான்காவது அகவையில்

பெயர் - கு.வாமணதாஸ்
முகவரி - கலைச்சோலை, கே.கே.எஸ். வீதி, வல்வெட்டித்துறை.



பத்தாவது அகவையில்



பெயர் - ந.அம்பிகா
முகவரி - கமலகம், கரவெட்டி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:--------------------

முகவரி :--------------------

பிறந்த ஆண்டு:--------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------
பெற்றார் ஒப்பம்




உரும்பிராய் சிறுமிகள் மீதான துஷ்பிரயோகம்

# சந்தேக நபரின் பிணைமனு நீதிமன்றினால் நிராகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பகுதியிலுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையமொன்றில்- இரு சிறுமிகளைப் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தியதாகச் சந்தேகிக்கப்படும் சிறுவர் நிலையக் காவலாளியான வயோதிபரின் பிணைமனு, யாழ். நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது.

உரும்பிராய் வடக்கு - கற்பகப் பிள்ளையார் கோவில் வீதியில் அமைந்துள்ள - ஸ்ரீ வசந்தா நாகபூஷணி அம்மன் சிறுவர் பராமரிப்பு நிலையத்திலிருந்த, பதினாறு வயதிற்குட்பட்ட இரு சிறுமிகளைப் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாகச் சந்தேகிக்கப்பட்ட அப்பராமரிப்பு நிலையத்தின் காவலாளியான முதியவர், பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இச்சம்பவம் தொடர்பான வழக்கு, நேற்று முன்தினம் யாழ்.நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட சமயம், சந்தேகநபரைப் பிணையில் விடுவிக்குமாறு, சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மன்றில் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை - பாதிக்கப்பட்ட சிறுமிகள் சார்பில் இலவச சட்ட உதவிகள் நிறுவனத்தைச் சேர்ந்த சட்டத்தரணி ஏகநாதன், மன்றில் ஆஜராகி - இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் இது வரை பூர்த்திசெய்யவில்லை என்றும், சட்டவைத்திய அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் கூறினார்.

மேலும் - பாலியல் குற்றங்கள் தொடர்பான திருத்திய புதிய சட்டத்தின்படி, இச்சம்பவம் பாரதூரமான குற்றச்சாட்டு என்பதுடன்,

இந்தச் சம்பவத்தை இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவே நீதிமன்றத்திடம் ஒப்படைத்தது என்றும் கூறியதுடன்,

எனவே - இந்தச் சம்பவத்தை விசேடமாக நீதிமன்றம் கையாள வேண்டுமெனவும், அவர் வேண்டினார்.

இக் காரணங்களால் - சம்பவம் தொடர்பான பூரணமான விசாரணை முடிவடையாமல் இருக்கும்நிலையில், சந்தேக நபரை பிணையில் விடுவிக்க வேண்டாம் என்றும், சட்டத்தரணி ஏகநாதன் கோரினார்.

சட்டத்தரணியின் வாதத்தை ஏற்றுக்கொண்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா - சந்தேகநபரின் பிணைமனுவை நிராகரித்ததுடன், வழக்கு விசாரணையை அடுத்தமாதம் ஒன்பதாம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

மேற்படி சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் நிர்வாகியான வசந்த குமாரி நித்தியானந்தம் என்பவரையும், அங்கு பணிபுரிந்த இரு ஆசிரியைகளையும், பாதிக்கப்பட்ட சிறுமிகளையும் - அடுத்தமாதம் ஒன்பதாம் திகதி மன்றிற்கு சமுகமளிக்குமாறும், நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார். (லி)

# திடீரெனக் கூடிய ஜே.வி.பியினரால் அலரிமாளிகைப் பகுதியில் பதற்றம்!

(கொழும்பு)

திடீரென ஜே.வி.பியினர் பெருமளவு வாகனங்களில் வந்திறங்கி, பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகைக்குள் நுழைய முயன்றனர்.

இதையடுத்துப் பொலிஸார் ஜே.வி.பி.யினர் மீது தடியடிப் பிரயோகம் செய்து, அவர்களைக் கலைத்தனர். நேற்றுமுன்தினம், முன்கூட்டியே திட்டமிடப்படாமல் - பொலிஸாருக்கு அறிவிக்காமலேயே, ஜே.வி.பியினர் அலரிமாளிகைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முனைந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஜே.வி.பி.யினர் திடீரென அலரிமாளிகைக்கு அண்மையில் பெருமளவில் ஒன்றுகூடியதால், அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

இதையடுத்தே ஜே.வி.பி.யினர் பொதுக்கூட்டத்தை நடத்தியதாகத் தெரியவருகிறது.

# சின்னஞ்சிறு செய்திகள்

### தொடர்புகொள்ள கோரிக்கை

சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினர், கீழ்க்குறிப்பிட்டவர்களைத் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு அறிவித்துள்ளனர்.

அக்னஸ் மரியா ஜோர்ஜ் குணராஜா (132, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம்), சாந்தமேரி ஜேசுதாசன் (புனித மரியாள் ஆலய அகதிகள் முகாம், சுருவில், ஊர்காவற்றுறை), மேரி பொன்மலர் அந்தோனிப்பிள்ளை (559/4, 2 ஆம் குறுக்குத் தெரு, வசந்தபுரம், கொழும்புத்துறை), மேரி எலிசபெத் மகேந்திரராஜா (559/53, 2 ஆம் குறுக்குத் தெரு, வசந்தபுரம், கொழும்புத்துறை), மரியாம்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை (மே/பா எஸ்.யோசப்பின், 64/1, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்), செல்வா விஜயராஜா (221, 7 ஆம் குறுக்குத் தெரு, மணியம்தோட்டம், கொழும்புத்துறை).

### சித்தாந்த ஞானக்களஞ்சியம் நூல் வெளியீடு

இலக்கியக் கலாநிதி பண்டிதமணி ஏழாலை மு.கந்தையாவின், முதலாவது ஆண்டுத் திதியையொட்டி "சித்தாந்த ஞானக் களஞ்சியம்" நூல் வெளியீட்டுவிழா - எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஏழாலை மேற்கிலுள்ள, அமரர் மு.கந்தையாவின் இல்லத்தில் - நூல் வெளியீட்டுக் கழகத் தலைவர் ஏ.விசுவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நூலின் வெளியீட்டுரையை கலாநிதி இ.முருங்கையனும், ஆய்வுரையைப் பேராசிரியர் இ.குமாரவடிவேலும் நிகழ்த்தவுள்ளனர்.

### சொற்பொழிவு

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றில் அமைந்துள்ள, நாவலர் மணி மண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் நடைபெற்றுவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில், இன்று வெள்ளிக்கிழமை 'தெய்வ வாசகம்' எனும் பொருளில் சைவப் புலவர் சு.செல்லத்துரை சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

### சின்னமுத்து தடுப்பூசி

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட - 42 பாடசாலைகளைச் சேர்ந்த 10 முதல் 14 வயது வரையான மாணவ, மாணவியருக்கு நேற்று முதல் தொடர்ச்சியாக ஒருமாத காலத்திற்கு சின்னமுத்து தடைமருந்து வழங்கப்பட்டு வருகிறது.

மாணவர்கள் அனைவரும் மேற்படி சின்னமுத்து தடை மருந்து பெற்றுக்கொள்ளத் தவறவேண்டாம் என்று, யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுள்ளார்.

### கந்தர்மடம் ஆலய உற்சவம்

கந்தர்மடம் - பழம்வீதி சித்தி விநாயகர் ஆலய அலங்கார உற்சவம், 18 ஆம் திகதி முதல் நடைபெற்றுவருகிறது.

நாளைமறுநாள் ஞாயிற்றுக்கிழமைவரை இடம்பெறும் உற்சவத்தில், மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் தெய்வீகப்பேருரையாற்றி வருகிறார்.

### தெய்வீகப் பேருரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் தற்போது நடைபெற்று வருகின்றது. மஹோற்சவ நாட்களில் மாலை 7.30 மணிமுதல் 8.30 மணிவரை, யாழ். பல்கலைகழக மாணவன் தமிழவேந்தன் - 'மகாபாரதம்' என்னும் பொருளில், தொடர்ந்து தெய்வீகப் பேருரையினை ஆற்றிவருகின்றார்.

### பாம்பு தீண்டியதால் ஒருவர் மரணம்!

(யாழ்ப்பாணம்)

மாதகல் பகுதியில், தோட்ட வேலையில் ஈடுபட்டிருந்த - உயரப்புலம், இளவாலையைச் சேர்ந்த கறுப்பையா வீரையா (வயது 44) என்பவர், பாம்பு தீண்டியதால் மரணமடைந்தார். கடந்த செவ்வாய்க்கிழமை காலை இவருக்கு பாம்பு தீண்டியது. ஆனால், மாலை 6 மணிக்கே சங்கானை வைத்தியசாலைக்கு இவா கொண்டுசெல்லப்பட்டார். அங்கு இவர் மரணமானார்.(41)

### ஆசிரியர் கலாசாலை ஆசிரியர்களுக்கு!

(யாழ்ப்பாணம்)

பலாலி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சி நெறியினைப் பூர்த்திசெய்துள்ள யாழ்ப்பாணக் கல்வி வலயத்திற்குட்பட்ட ஆசிரியர்கள், தாங்கள் மீண்டும் பாடசாலைகளில் இணைவதற்கான அறிவுறுத்தல் கடிதங்களை - யாழ்ப்பாணக் கல்வி அலுவலக ஆசிரியர் நிர்வாகக் கிளையில் 30 ஆம் திகதி திங்கட்கிழமை பெற்று, அடுத்தமாதம் 1 ஆம் திகதி முதல் மீளவும் பாடசாலையில் கடமையைப் பொறுப்பேற்குமாறு, யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

### செயலமர்வு பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 27, 28, 29 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த வலயக் கல்வி அலுவலர்கள், ஆசிரிய ஆலோசகர்களுக்கான சேவைத் தரக்கணிப்புப் பற்றிய செயலமர்வு, பிற்போடப்பட்டுள்ளதாக சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும், மாகாணக் கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாணப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (110)

### நாய்களுக்குத் தடுப்பூசி போடும் நடவடிக்கை பாதிப்பு

தடுப்பூசி மருந்து அனுப்பி வைகக்கப்படாததால், மாநகரசபையினரால் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போடும் பணிகள் தடைப்பட்டுள்ளன.

யாழ். மாநகர சபைக்குட்பட்டுள்ள இடங்களில், சனசமூக நிலையங்கள் ரீதியாக வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி போடும் பணி நடைபெற்று வந்தது. இதுவரை 50 வீதமான பகுதிகளில் இப்பணி பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையே மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு மருந்துகளை பெற்றுக் கொடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.




# அருமையான இந்த அழகுக்கலை

## பெண்களுக்கு ஏற்ற சுயதொழிலும்கூட

சந்திப்பு - உஷா, கலானந்தி

*அழகுக் கலைத்துறையில் 18 வருட அனுபவமுள்ள - திருமதி நளினி சிவகுமார் வெள்ளவத்தையில் 'நளின்ஸ்' அழகுக்கலை நிலையத்தை நடாத்திவருகிறார். அழகுக்கலையில் பிரபல்யமாக விளங்கிவரும் இவர், அழகுக் கலையின் முக்கியத்துவம் குறித்து வழங்கிய செவ்வி இது.*



**பெண்களும், அழகுக்கலையும் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

அழகையும், ஆரோக்கியத்தையும் பாதுகாக்க வேண்டும் என்ற அக்கறை, இன்றைய காலகட்டத்தில் பெண்கள் மத்தியில் அதிகரித்து வருகின்றது. எதைச் செய்தாலும் அதை நாம் திறம்படச் செய்யப் பழகிக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் மிகமுக்கியமான பருவம் இளமைப்பருவம். இந்தப் பருவத்தில்தான் - ஆண்களானாலும் சரி, பெண்களானாலும் சரி மிக அழகாகவும், வலிமையுடனும், பொலிவுடனும் காணப்படுவர்.

20 வயதுமுதல் 25 வயதுவரை அழகைப் பராமரிக்கும் பெண்கள், திருமணத்தின் பின்பு தாங்கள் அழகில் கவனம் செலுத்துவதைக் குறைத்துவிடுகின்றனர். தினமும் சிறிது உடற்பயிற்சியும், சரியான உணவுப்பழக்கமும் மற்றும் சருமபராமரிப்பும் இருந்தாலே போதும். எந்த வயதிலும் இளமையுடனும், அழகுடனும் இருக்கலாம். இவ்வாறு பராமரிக்காவிடின், 35 வயதுக்கு மேல் முகத்தில் சுருக்கங்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் உண்டு.

இப்பொழுது எல்லாப் பெண்களுமே தங்களுடைய அழகைப் பராமரிக்க அழகுக்கலை நிலையங்களை நாடிச் செல்கிறார்கள். அழகுக்கலை நிலையங்களுக்குச் செல்லும்முன், ஒவ்வொரு பெண்களும் யோசிக்கவேண்டியவை- நீங்கள் செல்லும் அழகுக்கலை நிலையங்கள் எவ்வளவு காலமாக இயங்குகின்றன. ஒவ்வொரு சருமத்திற்குத் தகுந்தவாறு சிகிச்சை அளிக்கப்படுகின்றதா? அத்துடன், பெண்கள் தயக்கமின்றித் தமக்குத் தோன்றும் சந்தேகங்களை அழகுக்கலை நிபுணரிடம் கேட்கவேண்டும். சிறந்த அழகுக்கலை நிபுணரையே, தமது அழகின் வழிகாட்டிகள் என்பதைப் பெண்கள் உணரவேண்டும்.

**எந்த வயதுப் பெண்கள் இக்கலையை ஆர்வத்துடன் பழகுகிறார்கள்?**

இக்கலையைப் பழகுவதற்கு வயது எல்லையோ, கால எல்லையோ இல்லை. இப்போது பொதுவாகப் பார்த்தால், இக்கலையை அருமையான ஒரு சுயதொழிலாகவே பெண்கள் கொண்டுள்ளார்கள். இத்தொழில்மூலம், மாதந்தோறும் குறைந்தபட்சம் சில ஆயிரங்களையாவது வருவாயாக ஈட்டக்கூடிய, பெண்களுக்கு ஏற்ற ஒரு சுயதொழில். அதனால், வெளிநாடு செல்லும் பெண்கள் இக்கலையைக் கற்றுப் பயிற்சி பெற்றுச் செல்கிறார்கள். ஆனால், இக்கலையைப் பயில்வதற்கும், இதை அழகுறச்செய்வதற்கும் திறமைமட்டும் இருந்தால் போதாது, பொறுமையும் மிகமிக அவசியம் தேவை. எதைச் செய்தாலும் அதைத் திறம்படச் செய்துமுடிக்கப் பழகிக்கொள்ள வேண்டும். எமது 'நளின்ஸ் அழகுக்கலை நிலையம்', வெறும் அழகுக்கலை நிலையமாக மட்டும் இல்லாமல், பயிற்சி நிலையமாகவும் அமைந்துள்ளது. இங்கு பயிற்சி பெற்றவர்கள் உள்நாட்டில் மட்டுமின்றி, வெளிநாட்டிலும் அழகுக்கலை நிலையத்தை அமைத்துள்ளார்கள் என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**எந்த வயதில் பெண்கள் Facial செய்யலாம்?**

'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பது பழமொழி. ஆனால், முகம் அழகாக இருந்தால்தான், அது மற்றவர்களின் அகத்தில் பதியும். எனவேதான் முகத்தின் அழகைக்கூட்டப் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கிறோம். அதில் முதலாவது முயற்சிதான் **Facial** ஆகும். **Facial** ஒவ்வொருவருடைய சருமத்தின் தன்மை, வயது, முக அமைப்பு ஆகியவற்றிக்குத் தகுந்தவாறு, சிறப்பான முறையில் செய்யப்படவேண்டியது. பொதுவாக 21 வயதுக்கு மேற்பட்டவர்கள் **Facial** பண்ணிக் கொள்வது சிறந்தது. அதற்கு கீழ்ப்பட்ட வயதினர் **Clear up** செய்துகொள்ளலாம். 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் கண்டிப்பாக **Facial** செய்யவேண்டும்.

**ஏன் Facial கண்டிப்பாகச் செய்யவேண்டும் என்று கூறுகிறீர்கள்?**

**Facial** செய்வதால், எமது முகத்திலுள்ள இரத்த ஓட்டம் சீராக நடைபெறும். இதனால், எமது சருமம் பொலிவுடனும், புத்துணர்ச்சியுடனும் காணப்படும், முகம் பளிச்சென்று இருக்கும். 35 வயதுக்குமேல் தோல் வரண்டுவிடும். கண்ணின்கீழ் கருவளையம், மங்கு, மரு, கழுத்து கருப்பு என்பன ஏற்படுவதுடன், கன்னம் தொங்க ஆரம்பிக்கும். இவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்குவார்கள். இதனால், மாதம் ஒருமுறையாவது **Facial** செய்தால், இந்தப் பிரச்சினைகளிலிருந்து நாம் எம்மைக் காப்பாற்றிக்கொள்ள முடியும்.

**Facial செய்வதாலும், தலைமுடிக்கு Dye பாவிப்பதாலும் ஏற்படும் பக்கவிளைவுகள் என்ன?**

முறையாக **Facial** செய்தால், எந்தவித பக்கவிளைவுகளும் இல்லை. அதாவது, எங்களுடைய சருமங்கள் எந்த வகையான சருமம் என்று கண்டறிந்து, அதற்கேற்றவாறு **Facial** செய்தால் எந்தவிதமான பாதிப்பும் இல்லை. அதாவது, முகப்பரு உள்ள சருமத்திற்கு மசாஜ் செய்யக்கூடாது. அவ்வாறு செய்தால் முகப்பரு அதிகமாகும். அதனால், சருமத்தின் தன்மைக்கு ஏற்ப இரசாயனக் கலப்பற்ற கிறீம்களைப் பாவித்து, **Facial** செய்தால் பக்கவிளைவுகள் ஏற்படாது.



அதேநேரம் தலைமுடிக்கு **Dye** பாவிப்பதால், பக்கவிளைவுகள் ஏற்பட இடமுண்டு. ஏனெனில், **Dye** என்பது இரசாயனக் கலப்புடைய பொருள். **Black Heana** என்று கூறுகிறார்கள். ஹேனா என்றால் என்ன? மருதோன்றி இலை பவுடரைக் கரைத்தால், செம்மஞ்சள் கலராகத்தான்வரும். ஆனால், கறுப்பாக மாறுவதற்கு அவர்கள் இரசாயனக் கலவையைக் கலக்குகிறார்கள். இவ்வாறு **Dye** பாவிப்பதால், கண்பார்வை காலப்போக்கில் பாதிப்படைய இடமுண்டு. அத்துடன், காலப்போக்கில் முகத்தில் மங்கு போல் கறுப்புப்படர் ஏற்படலாம். அது மட்டுமல்ல, பாவிக்கும் **Dye** ஒத்துப்போகாமல் இருந்தால், தலையில் அரிப்பு ஏற்படவும் இடமுண்டு.

# கொழுப்பைக் கரைக்கும் பசலைக் கீரை



பசலைக் கீரை போல, உடலுக்கு நன்மைதரும் கீரைவகை வேறெதுவும் இல்லை. இரும்புச்சத்து, போலிக் அமிலம், கல்சியம் எல்லாமே இதில் அதிகம். நோய்த் தடுப்புக்கு ஏற்ற சத்துக்கள் இதில் அதிகமாக இருப்பதால், நோய்வராமல் தடுப்பதற்கு உதவுகிறது.

குழந்தைகளுக்குவரும் சில நரம்பு வியாதிகளை, வராமல் தடுப்பதால் மேலை நாடுகளில், இதை கோதுமை, மைதா போன்ற மாக்களில் கலந்து விற்கிறார்கள். இந்தக் கீரையிலுள்ள சில இரசாயனப் பொருட்கள் பார்வைக் குறைவைத் தடுக்கிறது, மலச்சிக்கலுக்கு எதிரி.

பசலைக் கீரை பசுமையான ஈரப்பசையுடன் கரும்பச்சை நிறமாக இருக்கவேண்டும். மஞ்சள் இலைகள் இருந்தால் கீரை பழசு, தண்டு மெலிதாக இருந்தால் இளசு. நுகர்ந்துபார்த்தால் அதன் பச்சை வாசனையிலேயே தெரியும் புதியது என்று.

சாதாரணமாகக் கீரையை நறுக்கிவிட்டு அலம்புவார்கள். அப்படிச் செய்தால் சத்துக்கள் வெளியேறிவிடும். பதிலாக ஒரு பெரிய பாத்திரத்தில் நீர் வைத்து, அப்படியே முழுசாகப் போட்டு அலசி எடுக்கவும். தண்ணீரில் மண், குப்பை எல்லாம் தங்கிவிடும். பின்பு நறுக்கிச் சமைக்கவும்.

இதில் மிக அதிகமாக உள்ள பச்சையம் கொழுப்பைக் கரைக்கும் தன்மையுள்ளது. இரத்தத்தின் சிவப்பு அணுக்கள், ஈமோக்குளோபின் ஆகியவை அதிகமாக உற்பத்தியாக்க உதவுகிறது. இரத்தத்தில் ஒட்சிசனை ஏற்றிச்சென்று, உடலின் செல்களுக்குத் தந்து, அங்கிருந்து கரியமில வாயுவை வெளியேற்றுகிறது. இதனால், இரத்தம் சுத்தமாகி உடலில் பக்றீரியா தாக்காமல் தடுக்கின்றது. இக்கீரையிலிருக்கும் பொட்டாசியம் நரம்புமண்டலத்திற்கு வலுவூட்டுகின்றது. இரத்த அழுத்தம் சீராக இருக்கவும் பயன்படுகிறது.

# வீட்டை அழகுபடுத்தும் திரைச்சேலை

ஜன்னல் மற்றும் கதவுகளுக்குப் போடப்படும் திரைச்சேலைகள், ஒரு வீட்டின் அலங்காரத்தில் முக்கியபங்கு வகிக்கின்றது.

வேலையில் அலுத்துக் களைத்த ஒரு பெண், கலைந்திருக்கும் முடியைச் சீவி, முகம் துடைத்துப் பொட்டுப்போட்டுக் கொண்டால் எப்படி முகம் பளிச்சென்றாகிவிடுமோ,



அதேபோல திரைச்சேலை போடுவதும் வீட்டை நொடியில் ஆடம்பரமாக்கும்.

வெறும் ஆடம்பரத்துக்காகவோ, அலங்காரத்துக்காகவோ மட்டும் இல்லை. சரியான முறையில் திரைச்சேலை போடுவதன்மூலம், உயரம் குறைவான வீடு அல்லது மிகச்சிறிய அறை போன்ற பல குறைகளைக்கூடச் சரிப்படுத்திவிடமுடியும்.

உதாரணமாக - சிறிய ஜன்னலைக்கூட உயரமாகவோ, குறுகலான ஜன்னலைக்கூட அகலமாகவோ காட்டமுடியும்.

திரைச்சேலைக்கு நாம் தேர்ந்தெடுக்கும் நிறங்களும், குறிப்பிட்ட அந்த அறையின் ரசனையைக் கூட்டிவிடும். உதாரணமாக - ஒரு மாதிரி டிசைனில் (பெரிய கட்டம், சின்னக் கட்டம்போல) திரைச்சேலை மற்றும் தளபாடங்களுக்குச் சேலைபோடுதல் என்பன, கண்ணுக்கு மிகக் கவர்ச்சியாக இருக்கும்.

# வீட்டுக் குறிப்புகள் சில...

★ முட்டையின் வெள்ளைக் கருவை மட்டும் பாலில் கலந்து, நாள்தோறும் சாப்பிட்டு வந்தால், உடம்பு நல்ல ஊட்டம் பெறும்.

★ சுடுநீரில் தேனைக்கலந்து கொப்பளித்து வந்தால் வாய்ப்புண் குணமாகும்.

★ இரவில் நித்திரை வராவிட்டால், பசுப்பாலில் அதிகமாகத் தேன்விட்டு, படுக்கச்செல்லும் முன், குடித்தால் நல்ல உறக்கம்வரும்.

★ எலுமிச்சம் பழத்தோலைக் காயவைத்து, பொடிசெய்து - அதனைத் துணிதுவைக்கும் பவுடரில் சேர்த்துக்கலந்து, துணி துவைத்தால் துணி பளிச்சென்று இருக்கும்.

★ பச்சைக்காய்கறிகளை விரைவாகச் சமைத்தால் - நிறமும், சத்தும் குறையாது.

★ காய்கறிகளை வெட்டி நீண்டநேரம் வைக்கக்கூடாது. உடனுக்குடன் வாங்கிச் சமைப்பதே நல்லது.

★ பாயாசம் செய்யும்போது, அதில் கஜூ போடுவது வழக்கம். அதற்குப் பதிலாக, பேரீச்சம்பழத்தை வெட்டி நெய்யில் வறுத்துப் போட்டால், இரும்புச்சத்து நிறைந்ததாகவும், வித்தியாசமான சுவையாகவும் இருக்கும்.

★ வெங்காயம் தாளிக்கும்போது, சிறிது தேங்காய்ப்பால் சேர்த்துக்கொண்டால் - வெங்காயம் கருகிப்போகாது.

# சமோசா



**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| கோதுமை மா | - 1/2 kg |
| உருளைக்கிழங்கு | - 1/2 kg |
| வெங்காயம் | - 100 g |
| தேங்காய் எண்ணெய் | - 1/2 l |
| தனி மிளகாய்த்தூள் | - அளவாக |
| பெருஞ்சீரகத்தூள் | - தேவையானளவு |
| கறிவேப்பிலை | - தேவையானளவு |
| பெருஞ்சீரகம் | - தேவையானளவு |

**செய்முறை** - சமோசா செய்வதாயின், மாவை அரித்துத் தேவையானளவு உப்புச் சேர்த்துத் தண்ணீர்விட்டுக் குழைத்துவைக்கவும். பின், உருளைக்கிழங்கை அவித் தெடுத்துச் சுத்தம் செய்ததும் - சிறுசிறு துண்டுகளாக வெட்டி, அதனுடன் உப்பு, தனிமிளகாய்த்தூள் சேர்த்த பின்னர், வெங்காயத்தைத் துப்புரவு செய்து வெட்டியபின், தாச்சியினுள் சிறிதளவு எண்ணெய்விட்டு - நன்றாகக் கொதித்ததும், முதலில் கடுகினைப் பொரியப்போடவும். பொரிந்ததும் சிறுசிறு துண்டுகளாக வெட்டிய வெங் காயத்தைப் பொரியவிட்டு, பொரிந்ததும் அதனுள் - பெருஞ்சீரகம், கறிவேப்பிலை ஆகியவற்றைப் போட்டுக் கிளறியபின், உருளைக்கிழங்கை அதனுடன் சேர்த்துக் கிளறியதும், அதற்குள் சிறிதளவு தண்ணீரும் சேர்த்து - கொதித்துவந்ததும் இறக்கி, குழைத்து வைத்த மாவை Board இல் போட்டு, உருட்டி அதனுள் தயாரான கறியை வைத்து - விரும்பிய வடிவில் செய்யலாம். அதாவது, முக்கோண வடிவில் அல்லது நீள்சதுரவடிவில் வெட்டியெடுத்து, கொதிக்கும் எண்ணெயிலிட்டுப் பொன்னிறமாகப் பொரிந்ததும், எடுத்துத் தேநீருடன் பரிமாறச் சுவையாக இருக்கும்.

# ஒரு பூவின் பயணம்

**விழியொடு விழிகலந்தால் விளைவென்ன?**
**கேட்காதே!**
**எழுந்தது ஒரு காதற்பொறி இருவர் விழி**
**மோதலினால்.**
**பறக்குமுன் ஓர் தயக்கம் பார்வையிலே**
**சிறுநாணம்**
**சிறப்பு, மென்மை, கபடமின்மை கிறங்கும்**
**ஓர் சைகை உரு.**
**விரைந்ததுகண் பார்வையிட்டு வியர்த்திடும்**
**நெற்றிக்கு**
**உரு இதழாய், எழில்மலராய், உயர்**
**கொம்பாய்**
**விண்மீனாய்.**

உலகப் புகழ்பெற்ற உருதுக் கவிஞர் கை.ஃ.பி ஆஸ்மியின் மென்மையான வரிகளோடு, மென்மையான பாதையில் கொஞ்சம் பயணம் தொடர்வோமா? எந்தவொரு பெண்ணின் வாழ்வையும் தொட்டுச் செல்கின்ற இந்த உணர்வு, எங்கள் சமூகத்துப் பெண்ணின் நெருக்கடிகளுக்கு எங்காவது காரணமாகிறதா? எமது சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்படமுடியாத நடைமுறைகளில் ஒன்றாகக் காதல் கணிக்கப்படுகிறது. இக் கலாசாரத்தடை இங்கு இறுக்கமானதாக உள்ளதா? போன்ற சில சுவாரசியமான விடயங்கள் பற்றி, தொடரும் தொனிப் பொருள் அமைகிறது.

பெண்ணியம் பற்றிய செய்திகளின் முன்பாக, எதிர்ப்பாலர் நாட்டம் பற்றி மேலோட்டமாக நோக்கியிருந்தோம். இதன் அடுத்த படியாக - இன்றைய பயணம் அமைகிறது. 'மலரும்' பருவத்தின்பின், பெண்மீது இடப்படுகின்ற பலதளைகளின் மறைமுகமான காரணங்களில் ஒன்று காதல் என்கிற விபத்தில், பெண் சிக்கிக்கொண்டுவிடக் கூடாது என்பதாகும். இது நிகழ்த்தப்படும் விடயமல்ல. நிகழும் விடயமாக இருப்பதில், தடைகளின் மத்தியிலும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஆண் - பெண் கவர்ச்சி என்பது இயல்பானது. ஆனால், அது தனித்துவமான இதய அன்பாகச் சிறு வயதில் உணரப்படுவதைச் சமூகம் விரும்புவதில்லை.

**காதல் அடைதல் உயிரியற்கை - அது**
**கட்டுக்குள் அடங்கும் தன்மையதோ?**

என்பார் பாரதிதாசன். 'அன்பிற்கு அடைக்கும் தாள் இல்லை' என்று வள்ளுவர் சொன்னதை, வாலிபப் பருவத்திற்கேற்ப வடிவமைத்திருக்கிறார் அவ்வளவுதான்.

இந்த அழகான உணர்வினைப் பாடாத கவிஞர்களே இல்லை எனலாம். நேரடியாகக் காதலைப் போற்றிப்பாடாது - அதனையே தமிழ்மீதும், தாய்மண்மீதும் ஏற்றிப்பாடும் இலக்கியவாதிகள் ஒருபுறம், கற்பனையில் ஒரு காதலை உருவகித்து, அக் காதலைத் தாம் இழந்துபோனதாகக் கற்பனைசெய்து கண்ணீர்க் கவிதைகளை 'ஒப்பாரிகளாக' அரங்கேற்றுவோர் ஒருபுறம், இவற்றைவிட்டு காதலின்றிக் கருவெய்தாத தம்வாழ்க்கையை அழித்துக்கொள்வோர் ஒருபுறம், மேலும் அதனை ஒரு பொழுது போக்காகக் கொண்டிருப்போரும், காதலை வாழ்வின் இலட்சியத்தோடு இணைத்து முன்னேறுவோரும் என எண்ணிக்கையில்லாத வழிகளில் பெருகிப்போகிறது இப்பட்டியல். இது இன்று நேற்றல்ல. தொன்று தொட்டே வழங்கி வரும் உயிரியற்கையாக உள்ளது.

**புதுவோன் பின்னைப்**
**போனது என்நெஞ்சம்**
**இதுவோ அன்னாய்!**
**காமத்து இயற்கை.**

என்பார் சாத்தனார். 'காமம்' என்பது - ஆபாசமான சொல் என்று கருதி, பிற்கால இலக்கியவாதிகள் கண்டுபிடித்த "இடக்கரடக்கல்" தான் காதல் என்பார் அருள்மொழி. வெறும் ஹோமோன்களினால் தூண்டப்பட்ட உணர்வெழுச்சி இது என்பது ஒரு சாராரின் வாதம். காதல் தெய்வீகமானது என்பதை எவரும் அறியாமல் இருக்கமுடியாது.

**"காதல் என்பது தெய்வீகமானது என்று,**
**சொல்வதிலிருந்தே இரண்டும் பொய் என்று**
**புரிந்துகொள்ளலாம்"**

என்பது பெரியாரின் கருத்தாகும். இவ்வாறு பல்வேறுபட்ட சர்ச்சைகளுக்கு ஆளாகியிருக்கும் காதல், பல்லாயிரக்கணக்கான இலக்கியங்களுக்குத் தோற்றுவாயாக உள்ளது.

**காதலினா லுயிர் வாழும் - இங்கு**
**காதலினா லுயிர் வீரத்திலேறும்**
**காதலினா லறிவுண்டாம் - இங்கு**
**காதல் கவிதைப் பயிரை வளர்க்கும்.**
**காலமுற்றுந் தொழுதிடல் வேண்டும்.**
**காதலென்ப தோர் கோயிலின் கண்ணே.**

என்பார் மகாகவி பாரதியார். திரைப்படங்கள் காதல் தளத்திலேயே காலங்காலமாய் ஓடிக்கொண்டிருக்கின்றன. சினிமாப் பாடல்கள் அதில் தம்முயிரைப் பொதித்து வைத்துக் கொண்டிருக்கின்றன.

இவை எல்லாவற்றையும்விட, பெண்ணிய நோக்கில் காதல் என்ன செய்துகொண்டிருக்கிறது? பெண் - ஆணைவிடத் தாழ்ந்தவள் என நிறுவிக்கொண்டிருக்கிறது. இந்நிலைப்பாடு வழிவழியாக நிலவிவருவதாகும்.

**ஓராற்றான் என்கண் இமைபொருந்த**
**அந்நிலையே**
**கூரார்வேல் மாறன் என் கைப்பற்ற - வாரா**
**நனவென் றெழுந்திருந்தேன்**
**நல்வினை யொன்றில்லேன்**
**கனவும் இழந்திருந்தவாறு**

என்ற முத்தொள்ளாயிர வரிகளில் காணுங்கள். பெண் காதல் வசப்படுகின்றபோது, அவள் மெல்லியளாக, ஒரு படர்கொடியாகவே சித்திரிக்கப்படுகிறாள்.

**அண்ணல் அவன் தன்**
**மருங்கே**
**அளவிறந்த காதலினால்**
**உண்ணிறையும் குணம்**
**நான்கும்**
**ஒருபுடைச் சாய்ந்தன.**

எனச் சேக்கிழார் கூறுகின்றார். புராணங்கள் கூறும் தெய்வங்களிடையேயான, காதல் லீலைகளிலும், பெண் தன் நாற்குணங்களும்சேர நாணிநிற்பது இயல்பாகும். இலக்கியங்கள் காட்டும் காதல்வசப்பட்ட பெண்களுக்கு, பாலியல் அதிகாரம் மறுக்கப்பட்டுக் கொண்டே வருகிறது. தற்கால சிலதிரைப் படங்களும் "ஆணுக்குச் சமதுணிவான பெண் காதலிக்கப்பட ஏற்றவள் அல்ல" என்ற கருத்தினை முன்வைக்கின்றன. இதற்கு நல்ல உதாரணமாக - 'படையப்பா' படத்தின் பெண் கதாபாத்திரமான நீலாம்பரியைக் காட்டலாம்.

இது இவ்வாறிருக்க, சாதாரண சமூகத்தில் காதல் என்பது - ஒரு அடக்குமுறை வடிவமாக இருக்கவில்லை எனலாம். ஆனால், திருமணம் நேரடியான, மறைமுகமான அடக்கு முறைகளுக்கு வழிவகுத்திருப்பதை மறுக்க முடியாது. காதல் என்பது - ஒரு ஆண் அல்லது பெண் தன் வாழ்க்கைத் துணையினைத் தேர்வுசெய்து கொள்ளலாகும். இத்தேர்வு இருவர் பற்றி இருந்தாலும், முழுச்சமூகமும் இதில் ஆர்வங்கொள்கிறது.

வளரும் இளவயதில் காதல் தடைசெய்யப்பட்டிருக்கும் நிகழ்முறையானது, உள நெருக்கடிகளை மாணவர்கள் மத்தியில் தவிர்க்க உதவுகிறது. மேலைத்தேசங்களில் அவதானிக்கப்பட்டதான கலாசாரச் சீரழிவுகளைக் கட்டுப்படுத்த உதவுகிறது. எனினும், எமது சமூகத்தில் 'முதிர்ச்சி' பற்றிய எண்ணக் கருத்தில் மட்டுமின்றி - சாதி, மதம், இனம், குடும்பக் கௌரவம், பொருளாதாரம் போன்ற பல காரணிகளால் காதல் கட்டுப்படுத்தப்படுகிறது.



**பார்த்தேனடி உன்**
**முகத்தை**
**பகைச்சேனடி என்**
**சனத்தை**
**கேளாத வார்த்தையெல்லாம்**
**தங்கரத்தினமே.........**
**கேட்டேனடி உன்னால......**

எனும் நாட்டார் பாடலைக் காணுங்கள். சமூகத்தை மீறியும், மனங்கொண்ட துணையுடன் இணைபவர்களும் உண்டு. இயல்பாக எழுகின்ற இவ்வுணர்வு, மேற்சொன்ன சமூக, பொருளாதாரக் காரணிகளில் 'கட்டியெழுப்பப் படுவதும்' உண்டு. இதை மிக அழகாகக் கேலிசெய்கிறது மீராவின் கவிதை ஒன்று.

**உனக்கும் எனக்கும்**
**ஒரே ஊர்**
**வாசுதேவ நல்லூர்**
**நீயும் நானும்**
**ஒரேமதம்.**
**திருநெல்வேலிச்**
**சைவப் பிள்ளைமார்**
**வகுப்பும் கூட**
**உன்றன் தந்தையும்**
**எந்தன் தந்தையும்**
**சொந்தக்காரர்கள்.**
**எனவே**
**செம்புலப்பெயல் நீர்போல**
**அன்புடை நெஞ்சம்**
**தாம் கலந்தனவே.**

ச.சாரங்கா

ஒருவரையொருவர் மட்டும் நேசித்தலே விதியாக இருந்தபோதிலும், உலகில் ஒருவரை நேசிக்கத்தக்க இயல்புகளோடு, ஐம்பதாயிரம் பேர் பிறக்கிறார்கள் என்பது ஆராய்ச்

## அத்தியாயம் 12

சியாளர்களின் முடிவு. ஆகவே, காதலில் தோல்வியுற்றவர்கள் தம்கண் துடைத்துக் கொள்ளலாம். வளர்த்து வருகின்ற தாடியை மழித்துவிடலாம். காதலி நினைப்பில் "ஊற்றிக்" கொண்டிருக்கும் குடிவகைகளை நிறுத்திக்கொள்ளலாம். ஆனால், 'ஒரு பொய்யாவது சொல் கண்ணே!' என்று, தாம் மணங்கொண்ட பெண்ணின் பின்னே ஓடிக்கொண்டிருக்கிறது இளைஞரின் உலகம். காதல் - இளைஞர்களின் உலகிற்கு மட்டுமான இயல்பாக இல்லாதபொழுதிலும்கூட, இங்கு தீவிரமாகக் காணப்படுகிறது. ஏதோவொரு வேகத்தில் காதலித்துத் திருமணம்செய்து கொண்டபிறகு, அதற்காக வருத்தப்படுவோரும் இல்லாமல் இல்லை.

**உன்னைப் பார்த்தபோது**
**நினைத்தேன்**
**என்னைப் பார்க்க மாட்டாயா என்று.**
**பார்த்தபோது நினைத்தேன்**
**சிரிக்கமாட்டாயா என்று**
**சிரித்தபோது நினைத்தேன்**
**காதலிக்கமாட்டாயா என்று**
**காதலித்தபோது நினைத்தேன்**
**திருமணம் செய்து கொள்ளமாட்டாயா**
**- என்று**
**திருமணம் செய்தபிறகு**
**தினமும் நினைக்கிறேன்**
**ஏன் என்னைப் பார்த்தாய் என்று.**

இது வெறும் நகைச்சுவைக் கவிதை அல்ல. பல மனங்களின் அடியில் அப்பிக் கிடக்கின்ற சோகமும்கூட. காதலிக்கப்படும்பொழுதில், தமது மிகமேன்மையான உணர்வுநிலைகளையே வெளிக்காட்டிக் கொள்ளும் ஆண்களும், பெண்களும் திருமணத்தின் பின் - சகல உணர்வுநிலைகளுடனுமே வாழ்ந்துகொள்ளவேண்டியுள்ளது. மேலும், உற்சாகமான பருவத்திலிருந்து, குடும்பப்பொறுப்புக்களைத் தாங்க வேண்டியநிலைக்கு உள்ளாகும்போது, அவர்கள் உளநெருக்கடிகளுக்கு ஆளாகின்றார்கள். ஒருவரையொருவர் கோபப்பட்டுக் கொள்கிறார்கள். திருமணத்தின் முன்பிருந்த அன்னியயோன்யத்தை நினைத்துப் பார்க்கின்றார்கள். அக்காதலே பொய் என்ற முடிவுக்கு வந்து, விரக்தியான வாழ்வைத் தொடர்கிறார்கள். இந்நிலையில் மட்டுமன்றி, இதய அன்பைத் தெரிவுசெய்யும்பொழுதிலேயே, பெண் பல நெருக்கடிகளுக்கு ஆளாகிறாள். அவை பற்றி அடுத்த பயணத்தில் காண்போம். *(பயணம் தொடரும்)*

## மனசே... மனசே... கதவைத் திற...

## நிலா காட்டி உணவூட்ட வேண்டாம்

### குழந்தை வளர்ப்பில் சில ஆலோசனைகள்



குழந்தையைத் தனியாகத் தூங்கப் பழக்கவேண்டும். அப்போதுதான் குழந்தை - பெற்றோர் இருவரின் தூக்கமும் பாதிக்கப்படாமல் இருக்கும்.

பெரியவர்கள் பார்க்கிற சினிமா, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் எதையும் பார்க்க அனுமதிக்கக்கூடாது. 'பாபா'வையும், 'ஒ' போடுவையும் பார்க்கும் குழந்தை அதையே பின்பற்றும்.

தினமும் குறிப்பிட்ட நேரம் ஒதுக்கிக் கதைசொல்லி, பாட்டுப் பாடித் தூங்கவைப்பதைப் பழக்கமாக்கிக்கொள்ள வேண்டும்.

இரண்டு ஆடைகள், இரண்டு உணவு வகைகள் என்று காட்டி, குழந்தைகளையே தேர்வுசெய்து கொள்ளும்படி விட்டுவிடவேண்டும். இது குழந்தைக்குத் தேர்வுசெய்யும் பழக்கத்தை ஏற்படுத்தும். எதையும் வற்புறுத்தக்கூடாது. தயக்கம், வெட்கம் போன்ற பழக்கங்கள் வராமல் தடுக்க இது உதவும்.

ஒரு வயதிலிருந்து, தானே சாப்பிட்டுக் கொள்ளப் பழக்கவேண்டும். தானாகச் சாப்பிடத் தெரியாதே என்று - ஆறு, ஏழு வயதுவரை தீர்த்திவிட்டுக்கொண்டிருக்கக்கூடாது. இது தன்னம்பிக்கையையும், சிறந்த தலைமைத்துவத்தையும் ஏற்கப் பின்நிற்கச் செய்யும்.

ஆடு, மாடு, நிலா காட்டிச் சாப்பாடு ஊட்டக்கூடாது. சாப்பாட்டின் சுவையை உணர்ந்து சாப்பிடும்படி பழக்கவேண்டும்.

## கவிதைச் சோலை

### புரிந்துகொள்



**வசதியான மாப்பிள்ளைக்கு**
**வாழ்க்கைப்பட்டதில்**
**களவு போனது என் கனவுகள்.**
**கல்லூரியைக் கலக்கிய கவிதைகள்**
**அடைக்கப்பட்டன.**
**அடுக்களையின் அஞ்சறைப் பெட்டிக்குள்.**
**பெற்ற பிள்ளைக்குப் பெயர் வைக்கக்கூட**
**என் விருப்பம் கேட்டதில்லை நீ.**
**நீ கொடுப்பதை உடுத்து,**
**போட்டதை உண்ணும்**
**வளர்ப்புப் பிராணியாய் மட்டுமே**
**உன் வீட்டில் நான்.**
**என்வேரில் வெந்நீரை ஊற்றிவிட்டு**
**கூசாமல் சொல்லுகிறாய்**
**நான் படரத் தேர் தந்ததாய்.**
**எப்போது புரியும் உனக்கு?**
**கொடிகளுக்குத் தேவை தேரல்ல...**
**நீரும் வேரும் தானென்று!**

- ரேவதி

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடையவர் சொல். - திருக்குறள்.

# நமது நோக்கு

## மகத்துவமிக்க மக்கள் எழுச்சி!

ஈழத் தமிழ்மக்களின் வரலாற்றில் இன்றைய 'பொங்கு தமிழ்' நிகழ்வு - சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்ததாக, இலட்சக்கணக்கான மக்களின் பங்கேற்புடன் - 'எமது நிலம் எமக்கு வேண்டும்' என்ற சுதந்திர வேட்கையை, அடிப்படை உரிமையை ஓங்கியொலிக்கின்றது.

தமிழ்மக்களின் ஒன்றுதிரண்ட இந்த எழுச்சிக் குரல், இராணுவப் பிரசன்னத்திற்குள் கட்டுண்டு வாழும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமல் தடுக்கப்பட்டிருக்கும் பல்லாயிரம் மக்களின் உணர்வுவேகத்தை, அடக்க முடியாத ஆதங்கத்தை இன்று எட்டுத்திக்கிலும் முரசறைந்து சொல்கின்றது.

மக்கள் எழுச்சியும், ஒன்றுபட்ட மக்கள் குரலும் உலக வரலாற்றில் சாதித்தவை ஏராளம் ஏராளம். இந்த வகையில் ஈழத்தமிழர் வரலாற்றுப் பாதையிலும் மக்கள் எழுச்சிகள் பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கின்றன.

இத்தகைய மக்கள் எழுச்சியின் பிரவாகமாகவே அஹிம்சைப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இந்த அஹிம்சைப் போராட்டங்களை, சிங்கள அரசாங்கங்கள் தம் பலம் கொண்டு ஒடுக்கிய தொடர் நிகழ்வுகள்தான் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்திற்கு வித்திட்டன.

ஆயுதம் தாங்கிய போராட்டம் - ஒரு மக்கள் இயக்கமாக பரிணமித்ததால்தான், இந்தப் போராட்டத்தைச் சிங்கள அரசாங்கங்கள் - குண்டுகளைக் கொட்டி வதைத்தபோதும், இனப்படுகொலைகளை அரங்கேற்றிய போதும், அழிக்கமுடியாமற்போனது.

எமது மண்ணில் நாம் சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற உரிமையும், வேட்கையும்தான் - விடுதலைப் போராட்டத்தை நகர்த்திச்செல்லும் அச்சாணியாகின.

தாய் மண்ணில், எவ்வித ஆக்கிரமிப்புக்களுமற்று, அச்சுறுத்தல்களும் இல்லாது வாழும் வாழ்வை நோக்கியே - தமிழர் போராட்டம் விரைந்து சென்றது.

இந்த நிலையில் - அமைதிவழியில் தமிழர் தம் உரிமைகளைப் பெற்றெடுப்பதற்கு, சிங்கள அரசாங்கம் இணங்கி வருமாயின் - அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள தமிழர் தலைமை தீர்மானித்ததன் பேரில் - சமாதானப் பேச்சுக்களும், போர்நிறுத்தமும் உருவாகின.

போரின் தாக்கங்கள் இல்லாது, அதன் வலிகள் இல்லாது - அமைதி வழியில் தமிழினம் தனது சுதந்திரமான, தன்னாட்சியுள்ள வாழ்க்கையைச் சிருஷ்டிக்க முடியுமானால் - அது வரவேற்கத்தக்கதே என்ற எதிர்பார்ப்புக்கள் குழுமியிருந்தபோதும் -

சமாதானத்தின் தளர்ந்த வேகம், தமிழ்மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்திசெய்ய முடியாமற்போனது. 'சொந்த வீடுகளுக்குத் திரும்பலாம், வெறும் தண்ணீரைக் குடித்துக் கொண்டும் அங்கு எம்மால் வாழமுடியும்' என ஏங்கியிருந்த இடம்பெயர்ந்த மக்கள் - தொடர்ந்தும் ஏமாற்றங்களையே சந்தித்தனர்.

உயர்பாதுகாப்பு வலயமென்று, தமிழ்மக்களின் வீடுகளை, விளைநிலங்களை, ஆக்கிரமித்துக்கொண்டு இராணுவம் - தன் கால்களை ஊன்றிநிற்க -

இந்தப் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே - கண்ணீரும் கம்பலையுமாக, அவலமே வாழ்வாகிப்போன துயரத்துடன் வாடிநிற்கின்ற மக்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டிய தேவை எழுந்தது.

இந்தத் தேவையின் வெளிப்பாடே - இன்று பொங்கு தமிழாகப் பரிணமித்திருக்கிறது. இது அடாத்தாக விடுக்கப்படும் கோரிக்கையல்ல அல்லது நியாயமின்றி எழுந்து வரும் குரலுமல்ல. 'ஆண்டாண்டுகளாய் வாழ்ந்த எமது மண்ணை எமக்குத் தாருங்கள்' என்ற அடிப்படையான, ஜீவாதாரமான, மனிதநேயத்தின் கண்ணீர் வரிகளை எடுத்துச் சொல்கின்ற - துன்பப்பட்டு நிற்கின்ற மக்களின் ஒருமித்த குரல் இது.

'எங்கள் மண்ணுக்கு நாங்கள் செல்ல, எங்கள் வீடுகளில் நாங்கள் வாழ - எமது மண்ணையும், வீடுகளையும் பலாத்காரமாகப் பறித்துவைத்திருக்கும் படையினரே - நீங்கள் உங்கள் மண்ணுக்கும், உங்கள் வீடுகளுக்கும் செல்லுங்கள்' என்று மக்களின் ஒருமித்த வெளிப்பாட்டை அரசாங்கத்துக்கும், சர்வதேசத்துக்கும் இன்றைய நாள் எடுத்துச் சொல்லும்.

தமிழ்மக்களின், மனிதநேயம் அவாவிநிற்கும் இந்தக் குரல்களின் நியாயத்தை, இந்தக் குரல்களுக்குப் பின்னால் நிறைந்திருக்கும் துயரத்தை, ஒடுக்குமுறையின் ஆழத்தை- சர்வதேசமுட்பட அனைத்துத் தரப்புகளும் உணர்ந்து கொண்டு - உறுதியான நடவடிக்கைகளுக்கு உதவ வேண்டும்.

தமிழ் மக்களின் பாதுகாப்புக்காகவே இராணுவம் படைமுகாம்களை வைத்திருக்கிறது எனப் படைத்தரப்புக் கூறிவர, இங்குள்ள இராணுவத்தை விலகிச் செல்லும்படி மக்கள் ஒன்றுதிரண்டு குரலெழுப்பும், இன்றைய பொங்கு தமிழ் நிகழ்வு - உண்மையை உலகிற்கு உள்ளவாறு எடுத்துச் சொல்லும்.

ஒட்டுமொத்தத்தில் - இராணுவ ஆக்கிரமிப்பும், உயர் பாதுகாப்பு வலயங்களுமில்லாத, தமிழ்மக்களின் சுதந்திரமான சுமுக வாழ்க்கைக்கு - இன்றைய 'பொங்கு தமிழ்' நிகழ்வு உறுதியான நல்ல பதிலைப் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையுடன் கூடிவரும் மக்களின் எழுச்சி - தமிழர் வரலாற்றில் மற்றுமோர் பரிணாமத்தை தொட்டுச் செல்கின்றது என்றே சொல்லவேண்டும்.

சமாதானத்தில் மக்கள் பங்கேற்புப் பற்றி வலியுறுத்திக்கூறும் சர்வதேசம் - தமிழ்மக்களின் இந்த ஒன்றுபட்ட குரலுக்கு அளிக்கப்போகும் பதிலில்தான், சர்வதேசத்தின் நியாயத்தன்மையே தங்கியிருக்கின்றது

# தேசிய பாதுகாப்புச்சபைக் கூட்டத்தை வாராந்தம் நடத்த சந்திரிகா முடிவு

முப்படைத் தளபதிகளையும் தேசிய பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் வாராந்தம் சந்தித்துப் பேச, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்திருப்பதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுவரை மாதாந்தம் நடத்தப்பட்டுவந்த பாதுகாப்புச் சபைக் கூட்டத்தை, இனி வாராந்தம் நடத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பாதுகாப்பு அமைச்சை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது பொறுப்பில் எடுத்துக்கொள்ளும் சாத்தியக் கூற்றை அவர் இதுவரை மறுக்கவில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் கொழும்பில் தெரிவித்தார்.

புலிகளுக்கு இடைக்கால நிர்வாகம் வழங்கவேண்டுமாக இருந்தால், மாகாணசபை மட்டத்தில்தான் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதே ஜனாதிபதி சந்திரிகாவின் கருத்தாகும்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தீர்வுத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படுவது நல்ல ஆரம்பம் என்று ஜனாதிபதி கருதுவதாகவும், ஹரீம் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

## காக்கை வலிப்பு நோய்க்கு நடமாடும் வைத்திய சேவை!

(ஆழியவளை)

கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்கம் நடாத்தும், காக்கை வலிப்பிற்கான நடமாடும் வைத்தியசேவை அடுத்தமாதம் கரைச்சி, கண்டாவளை, பூநகரி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் நடாத்தப்படவுள்ளது.

நோர்வே நாட்டிலிருந்து வருகைதரும் வைத்திய கலாநிதி சூசை என்பவரால், இந்தச் சிகிச்சை அளிக்கப்படவுள்ளது.

இம்மருத்துவ சேவையில், சிகிச்சை பெறவிரும்புகின்ற 20 வயதிற்குட்பட்ட - கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் - எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர், ஜெயபுரம் ஊனமுற்றோர் சங்கம், கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம், கல்மடுநகர் ஊனமுற்றோர் புனர்வாழ்வகத் தொடர்பகம் ஆகியவற்றில் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தினர் கேட்டுள்ளனர். (122)

## வன்னியிலும் கடற்பகுதிகளிலும் விடுதலைப் புலிகள் தொடர் பயிற்சி!

### இராணுவ வட்டாரங்கள் கூறுகின்றன

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் வன்னிக் காட்டிலும், கடலோரப் பகுதியிலும் தொடர்பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வெலிஓயா, முல்லைத்தீவுக் கரையோரம், குடாநாட்டை அண்டிய பகுதிகளில் - புலிகள் இந்தப் பயிற்சிகளை மேற்கொண்டு வருவதாக இராணுவத்தரப்புத் தகவல் வெளியிட்டுள்ளது.

வெலிஓயாவில் கல்யாணபுர முன்னணிப் பாதுகாப்பு நிலையிலுள்ள படையினர், தொடர்ச்சியான துப்பாக்கிச் சத்தங்கள் கேட்பதாக முறைப்பாடு செய்துள்ளனர்.

பூநகரியிலும் குண்டுச் சத்தங்கள் கேட்பதாக, குடாநாட்டிலுள்ள படையினர் தெரிவித்துள்ளனர். இதேவேளை, முல்லைத்தீவுக் கடலோரப் பகுதியில் கடற்புலிகள் சிறிய மற்றும் நடுத்தர ஆயுதங்களைப் பயன்படுத்திப் பயிற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் இராணுவ வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# சரணாலயத்துக்கான நீரை மறிப்பதால் மிகப் பாரிய பின்விளைவுகள் ஏற்படும்!

### கிளிநொச்சி அரச அதிபர் இராசநாயகம்

சுண்டிக்குளம் பகுதியில் அமைந்துள்ள பறவைகளின் சரணாலயத்திற்குச் செல்லும் நீரைத் தடுத்துநிறுத்தி விவசாயச் செய்கைகளுக்குப் பயன்படுத்துவதால், சரணாலயத்திற்குப் பாரிய பின்விளைவுகள் ஏற்படும் என, கிளிநொச்சி அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

1862 ஆம் ஆண்டளவில் பிரகடனம் செய்யப்பட்ட, சுண்டிக்குளத்தில் உள்ள பறவைகள் சரணாலயத்திற்குச் இரணைமடுக்குளத்திலிருந்து கழிவுநீர், செல்வதால் கூடிய பறவைகள் உயிர்வாழக்கூடியதாக உள்ளது.

இப்பறவைகள் - பயிர்களுக்கு நாசம் விளைவிக்கும் கிருமிகளையும், பூச்சிகளையும் - பூச்சிநாசினியின் உதவியின்றி அழிக்கும் வல்லமையைக் கொண்டுள்ளன. இப்பறவைகள் விவசாயிகளுக்குத் தோழனாக அமைகின்றன.

எனவே, பறவைகளின் சரணாலயத்திற்கான கோடைகாலக் கழிவுநீரினை, விவசாயம் என்ற போர்வையில் தடுப்பதானது, பாரதூரமான பின்விளைவுகளை விவசாயிகளுக்கு ஏற்படுத்துவதுடன், பறவைகள் அருகிவருவதற்கும் வழிசமைத்துவிடும் என்றார். (122)

## மதன்குமார் தங்கியிருந்த விடுதி பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது!

(கொழும்பு)

தெஹிவளைப் பொலிஸ்நிலையக் குற்றத்தடுப்புப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சுனில் தாப்ருவை சுட்டுக் கொன்றதாகச் சந்தேகிக்கப்படும் இளைஞர், முன்னர் நோய்வாய்ப்பட்டிருந்தபோது - மருத்துவமனைச் செலவுகளை சுனில் தாப்ருவே பொறுப்பேற்றதாகப் பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சுனில் தாப்ருவுடன் நெருங்கிய நண்பராக இருந்த மதன்குமார் என்ற இளைஞர், சில மாதங்களுக்கு முன்னர் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். இதற்கான செலவுகளையே சுனில் தாப்ரு பொறுப்பேற்றதாகத் தெரியவந்துள்ளது.

இதேவேளை, கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மதன் குமாரை, நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர் செய்தபோது, அடுத்த மாதம் 8 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை - மதன்குமார் தங்கியிருந்த புறக்கோட்டை, கதிரேசன் வீதியிலுள்ள விடுதியைப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த விடுதியிலேயே, மதன்குமார் கடந்த ஆறு மாதங்களாகத் தங்கியிருந்தது தெரியவந்துள்ளது. பத்து நாட்களுக்கு முன்னரே - இந்த விடுதியில் தங்குவதற்காக மதன்குமார் செய்துகொண்ட ஆறு மாதகால உடன்படிக்கை முடிவுற்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## விமானச் சிப்பந்தியைத் தாக்கிய இலங்கையருக்கு 20 வருடச் சிறை

(வொஷிங்ரன்)

விமானச்சிப்பந்தி ஒருவரைத் தாக்கிய இலங்கையர் ஒருவருக்கு, இருபது வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் எனத் தெரியவருகிறது.

லொஸ் ஏஞ்சல்ஸ் நகரிலிருந்து - மணிலாவுக்குச் சென்றுகொண்டிருந்த பிலிப்பைன்ஸ் விமானத்தில் பயணம் செய்த இலங்கையர் - சந்திரா திசநாயக்க என்பவர் விமானச் சிப்பந்தியுடன் சண்டையிட்டு அவரைத் தாக்கினார்.

கடந்த மார்ச் 26 ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றது. விமானச் சிப்பந்தியைத் தாக்கிய இலங்கையர் மீது, அமெரிக்காவில் வழக்குப் பதிவு செய்யபட்டு விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன.

இவருக்கு 20 வருடச் சிறைத்தண்டனையும், 25 ஆயிரம் டொலர் அபராதமும் விதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.



கற்றல் தேவைக்காக - 'நமது ஈழநாடு' அலுவலகச் செயற்பாடுகளை அவதானிக்க, யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் நேற்றையதினம் வந்திருந்தபோது எடுத்த படங்கள் இவை.

'பொங்கு தமிழ்' நிகழ்வில்

# உரிமைக்காகவும், சமாதானத்துக்காகவும் அனைத்து மக்களும் ஒன்றுதிரள வேண்டும்!

## வட மாகாண அதிபர் சங்கம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு மக்கள் அனைவரும் உரிமைக்கும் சமாதானத்துக்குமாக தங்களின் குரல்களை ஓங்கி ஒலிக்கச் செய்வதன்மூலம் உலக நாடுகளுக்கு ஓர் தெளிவினை ஏற்படுத்த வேண்டும் என்று பொங்கு தமிழ் நிகழ்வுக்கு அழைப்பு விடுத்து வட மாகாண அதிபர்கள் சங்கம் விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

உரிமைகளுக்காகப் போராடுகின்ற எந்தவொரு இனமும் உணர்வு வெளிப்பாட்டினையே ஆதாரமாகக் கொள்கின்றது.

ஈழத்தமிழ் மக்களது உரிமைப் போராட்டமும், மக்களது மனதில் உறைந்துள்ள உணர்வின் வெளிப்பாடுகளால் உருப்பெற்றதாகும். சொல்லில் வடிக்கவொண்ணாத் துன்பங்களினாலும், தியாகங்களினாலும் செயலுருப்பெற்று, இன்று உலகளாவிய ஒரு முனைப்பான விடயமாகிவிட்ட ஈழத் தமிழரின் பிரச்சினை, முக்கியமானதொரு நிலைமாறும் கட்டத்தில் நிற்கிறது.

செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் புரியாத ஒன்றாகவேயுள்ளது. வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இயல்பு வாழ்க்கையினைத் தோற்றுவித்தல் என்னும் மகுடவாக்கியத்துடன் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தமானது - இயல்புநிலை தோன்றுவதற்காகப் பெரிதாக எதனையும் இதுவரை செய்துவிடாத நிலையில், தீர்வுமுயற்சிகள் தேக்கநிலையை அடைந்துள்ளன.

தமிழ் மக்களது உண்மையான உணர்வுகள், அவர்களது நியாயமான தேவைகள் உணரப்பட்டதாகத் தெரியவில்லை. அரசும், உலக நாடுகளும் தமிழ் மக்களது மறுக்கவொண்ணா உரிமைகளையும் அவர்தம் உணர்வுகளையும் மலினப்படுத்திப் புறந்தள்ள முனைகின்றன.

இத்தருணத்தில் தமிழ்மக்கள் விழித்தெழுந்து தொழிற்பட்டால் மாத்திரமே தமது கௌரவமான இருப்பை உறுதிசெய்து கொள்ளமுடியும். எமது இலக்கு அடையப்படும்வரை நமது உணர்வுகளை வெளிக்காட்டுதல் தமிழ் மக்கள் அனைவரதும் கடமையாகும்.

எமது பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு எட்டப்படும்வரை, எமது குரல் ஓங்கி ஒலிக்கவேண்டும். தேக்கநிலையடைந்துள்ள இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தைகள் - உரிய முறையில், உரிய திசையில், முன்னெடுக்கப்படுவதற்கான அடிப்படையாக, வட - கிழக்கில் மக்களது இயல்புநிலையைத் தோற்றுவித்தல் அமைந்துள்ளது.

தமது சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேற்றப்பட்ட மக்களை, மீண்டும் தத்தமது சொந்த இடங்களில் குடியமரச்செய்தல், அதே போன்று பாடசாலைகள், ஆலயங்கள் முதலியவற்றிலிருந்து இராணுவத்தினர் வெளியேறுதல் என்பன உடனடித்தேவையாக நிறைவேற்றப்படல் வேண்டும்.

அப்போதுதான் அர்த்தமுள்ள வகையில் பேச்சுவார்த்தையினைத் தொடர வாய்ப்பேற்படும். இதனை வலியுறுத்தி, இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மக்களமைப்புக்களால் மேற்கொள்ளப்படவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வில் பங்கேற்று, யாழ்.குடாநாட்டு மக்களனைவரும் உரிமைக்கும், சமாதானத்திற்குமாகத் தங்கள் குரல்களை ஓங்கி ஒலிக்கச் செய்வதன்மூலம், உலக நாடுகளுக்கு ஓர் தெளிவினை உண்டு பண்ணுதல் வேண்டும் என, வட மாகாண அதிபர்கள் சங்கம் அனைத்து மக்களையும் அன்பாகக் கேட்டுக்கொள்கின்றது.



பொங்குதமிழ் முன்னேற்பாட்டு குழுவினருடன் பொதுமக்கள் இணைந்து நடத்திய அரங்க நிகழ்வில், மக்கள் எழுச்சிக் குரல்தரும் ஒரு காட்சி.

# காணாமற்போனோரின் குடும்ப அமைப்பு 'பொங்கு தமிழ்'நிகழ்வுக்கு வாழ்த்து!

இன்று நடைபெறும் பொங்கு தமிழ் - நிறைந்த வெற்றிபெற வாழ்த்தி, கொழும்பிலுள்ள காணாமற்போனோரின் பெற்றோர், குடும்பத்தினருக்கான அமைப்பு செய்தியொன்றை வெளியிட்டுள்ளது. இந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்துக்கு முன்தோன்றிய" மறத்தமிழனின் தாய்மொழியின் பெருமையைப் பறைசாற்ற, யாழ். பல்கலைக்கழக சமூகம் மேற்கொள்ளும் பொங்கு தமிழ் விழா வெற்றிபெற வாழ்த்துகின்ற இந்த வேளையில், எங்களுடைய அமைப்பின் சார்பில் எமது வேண்டுதலையும் முன்வைக்கின்றோம்.

இந்தப் பொங்கு தமிழின் கருப்பொருளான - "நாங்கள் எங்கள் வீடுகளுக்குச் செல்வதற்கு, இராணுவமே நீங்கள் உங்களுடைய வீடுகளுக்குச் செல்லுங்கள்" என்ற தொனி, இன்றைய சூழ்நிலைக்குப் பொருத்தமான ஒரு தொனிப்பொருளாகும். இந்தநிலையிலே, பேரினவாதிகளின் கர்ண கொடூரமான இந்த யுத்தத்தின் சாபத்தால், ஆயுதம் ஏந்தி, தமிழ் இனத்தின் விடுதலைக்காகப் போராடி, வீரமரணமடைந்த எமது வீரப்புதல்வர்களை நாம் நினைவுகூருவோம்.

அதேவேளை, இந்தச் சூழ்நிலையில் இத்தகைய வீரப்புதல்வர்களைப் பெற்றமைக்காக, தமிழர் தாயகம் பெருமைப்படுகின்ற அதேவேளை-ஆயுதம் ஏந்தாமலே அப்பாவித்தனமாகப் பேரினவாத இராணுவத்தின் கொடூர வஞ்சகத்தினால், காணாமற்போன இளைஞர், யுவதிகளின் பெற்றோர்கள், கணவர்மார்கள். மனைவிமார்கள், சகோதரர்கள் படுகின்ற வேதனை - எத்தகையது என்பதைத் தங்களுடைய பொங்கு தமிழின் மூலமாகத் தமிழ் கூறும் நல்லுலகிற்குப் பறைசாற்றுவீர்களாக.

ஏனெனில், இந்தக் காணாமற்போனவர்கள் - என்று வருவார்கள் என்ற சோகமே உலகில் மிகப் பெரிய சோகமாகும் என்பதை முழுவுலகிற்கும் இந்தப் பல்கலைக்கழக சமூகம்- அறிய, உணரவைக்க வேண்டும். இவ்வாறிருக்க, இன்று யாழ்.பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்படவிருக்கும் இந்தப் பொங்கு தமிழின் பேரெழுச்சியைத் தமிழ் கூறும் நல்லுலகம் மிகமிக உன்னிப்பாக உற்றுநோக்குவதை, யாழ்.பல்கலைக்கழகம் அறியும்.

இலங்கைவாழ் தமிழர்களின் கன்னித்தமிழின் அறிவுப் பெட்டகம் யாழ்.பல்கலைக்கழகம்தான் என்பதை எவரும் மறுக்கமுடியாத நிலையில், யாழ். பல்கலைக்கழகம் வட - கிழக்குக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படக்கூடாது. ஏனெனில், 1931 ஆம் ஆண்டு சனத்தொகையில் இலங்கையின் சனத்தொகைக் கணிப்பீட்டின்படி 40 இலட்சத்தைத் தாண்டியிருக்க வேண்டிய மலையகத் தமிழர்கள், இந்த 21 ஆம் நூற்றாண்டிலும்கூட - 16.5 இலட்சமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

அந்தவகையில், தமிழை உயிரென மதிக்கும் மலையக மக்களின் தமிழ் வளர்ச்சிக்கு இந்தப் பல்கலைக்கழக சமூகம் பெரும்பங்காற்ற வேண்டும். நாடாளுமன்ற ஜனநாயகத்தின் போலித்தன்மையினால், அந்த மக்களுடைய கன்னித்தமிழ் இன்று அரச மட்டத்தில் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளதை யாழ்.பல்கலைக்கழகம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவற்றிற்கெல்லாம் தீர்வு காணும் ஒரு நிகழ்வாக இந்தப் பொங்கு தமிழ் எழுச்சிவிழா பரிணமிக்கவேண்டும்.

இதற்கான ஒரு தீர்வாக மலையக தமிழ் மக்களுக்காக ஓர் இணைந்த பல்கலைக்கழகம் உருவாக யாழ்.பல்கலைக்கழகம் ஆவன செய்ய முன்வரவேண்டும். ஏனெனில், இந்த உலகில் பல நாடுகளில் தமிழர்கள் வாழ்கின்றார்கள். இருப்பினும், எந்த அளவிற்கு தமிழ் மொழியினூடாக வாழ்கின்றார்கள் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

உலகெங்கும் வாழும் தமிழினத்தின் மாண்புக்குப் பெருமை சேர்க்கும் வகையில் யாழ்.பல்கலைக் கழகமும், பல்கலைக்கழக சமூகமும் இருப்பதனால், இதற்கெல்லாம் ஒரு விடிவுகாண இந்தப் பொங்கு தமிழ் எழுச்சிவிழா பொருத்தமாக அமைகின்ற இவ்வேளை, சகல வழிகளிலும் வெற்றிபெற வேண்டும் என்று நாம் வாழ்த்துகிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது..

# தமிழரின் எழுச்சி வடிவத்தை சர்வதேசத்துக்கு புலப்படுத்துவோம்!

## வடமராட்சி கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசம் அறிக்கை

சர்வதேச சமூகத்திற்கு தமிழ் மக்களின் எழுச்சியின் வடிவத்தைத் துலங்கவைக்க, பொங்கு தமிழ் நிகழ்வில் அனைத்து மக்களையும் கலந்துகொள்ளுமாறு - வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் விடுத்துள்ள அழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

எம் தமிழ் உறவுகள் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதற்காக, இராணுவக் கட்டுப்பாட்டில் யாழ். மாவட்டம் இருந்த போது முதலாவது 'பொங்கு தமிழ்' நிகழ்வை வெற்றிகரமாக முடித்ததன் விளைவாகவே புரிந்துணர்வு ஒப்பந்தமும் சமாதானப் பேச்சும் ஏற்பட்டது.

தற்போது சமாதானப் பேச்சு மந்த நிலை அடைந்திருக்கும்போது நடத்தப்படும் இந்தப் 'பொங்கு தமிழ்' நிகழ்வில் அனைத்துக் கடற்தொழிலாளாகளும் கலந்துகொள்ள வேண்டும்.

இதன்மூலம் சர்வதேசத்திற்கு எம் மக்களின் எழுச்சியின் வடிவம் துலங்கவேண்டும். இதுவே சமாதானம் நிலைபெற வழிபிறக்கும். பொங்கு தமிழின் உன்னத நோக்கு நிலைபெற நாம் ஒன்று கூடுவோம் எனக் கூறப்பட்டுள்ளது.

# ஒன்றுபட்டுக் குரல் கொடுப்பது உலகின் கவனத்தை ஈர்க்கும்!

## பொங்கு தமிழுக்கு ஈழவேந்தன் செய்தி

(யாழ்ப்பாணம்)

'பொங்கு தமிழ்' நிகழ்ச்சி - ஈழத் தமிழரின் பொங்கு தமிழ் உணர்வை எதிரொலிக்கிறது. வேற்றுமை மறந்து, ஒன்றுபட்டுக் குரல் எழுப்புவது - உலகின் கருத்தினை எம்பால் ஈர்க்க உதவும் என, தமிழீழ விடுதலை அணிச் செயலாளர் ஈழவேந்தன் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் மேலும் -

"எங்கள் நிலம் எமக்கே", "நாங்கள் எங்கள் வீடுகளுக்குச் செல்வதற்கு படையினரே நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்" என்று தமிழ் மக்கள் ஒன்றுபட்டு எழுப்புகின்ற குரல், பொருள் பொதிந்த கூற்றாகும்.

ஒரு இனம் எதையும் இழக்கலாம், மீண்டும் வாழ்வும் பெறலாம். ஆனால், ஒரு இனம் தம்மண்ணை இழந்துவிட்டால், அதன் வரலாறு அதோடு முடிவடைகிறது. மொழி வாழ, இனம் வாழவேண்டும். இனம் அந்தரத்தில் இருக்கின்ற இந்திர லோகத்தில் வாழமுடியாது. மொழியின் வாழ்வும், அம்மொழி பேசும் இனத்தின் வாழ்வும் தனது தாயகத்தின் வாழ்வோடு பின்னிப் பிணைந்ததாகும். ஒரு இனம் தன்னைத்தான் உணர்த்துவதற்கு, தற்பாதுகாப்போடு வாழ்வது இன்றியமையாதது.

எனவேதான், நிலம் காத்து, நிலையான வாழ்விற்கு வழிவகுக்கும் 'பொங்கு தமிழ்' நிகழ்ச்சியை-பொங்கும் தமிழ் உணர்வோடு அனைத்துத் தமிழ் மக்களும் திரண்டு வந்து, ஆதரிக்கவேண்டுமென்று தமிழ் ஈழ விடுதலை அணி பணிவோடு வேண்டி நிற்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாடு பிளவுபடுவதைத் தடுக்க வேண்டுமானால் இயல்புவாழ்வுக்கு இட்டுச் செல்லவேண்டும்!

## வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

நாடு பிளவுபடுவதைத் தவிர்க்க வேண்டுமானால் - சமாதான முன்னோடி முயற்சிகளில், முக்கியமாக இயல்பு வாழ்க்கைக்கு மக்களை இட்டுச்செல்லவேண்டும் என்று, வலி.கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

அரசுக்கும், புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு, 15 மாதங்களாகின்றன. பெரும் பாதிப்புக்குள்ளாகி, சொந்த வீடுகளில் வாழமுடியாத நிலைமையில் - உள்நாட்டிலேயே அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் பல லட்சம் தமிழ் மக்கள். நீண்ட காலப் பொருளாதாரத் தடையின் விளைவாக சொல்லொணாத் துயரத்தை அனுபவித்தவர்கள் எமது மக்கள். இவர்களுக்கு இன்னமும் விடிவு ஏற்படவில்லை.

'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும், அதன் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததும், சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து சிறந்ததும்' எமது சொந்த மண்ணின்பால் ஏற்பட்ட பற்றுணர்வுதான் காரணமாக அமைகின்றது.

தாயன்பு போன்ற இந்த மண்பற்றை எவராலும், எப்போதும் தடுத்துவிட முடியாது. இதற்கு இடையூறு வந்தால் எப்படிப்பொறுத்துக்கொள்வது? கடந்த இரு தசாப்தங்களாக சொந்தநாட்டிலேயே அகதிவாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் லட்சக்கணக்கான மக்களின் உளவியல் ரீதியான பாதிப்பை, மற்றைய எவரும் ஊகித்து உணர்ந்துகொள்வதே கடினம்.

இந்த அகதிவாழ்க்கை ஏறக்குறைய ஒரு தலைமுறை இடைவெளியைக் கொண்டதாகக் கொள்ளலாம். இதன் ஆரம்பமும், முடிவும் இருள்மயமானது. நாட்டின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக அமைந்தது.

பல்லின மக்களைக்கொண்ட எந்த நாட்டிலும் ஒருவரை மற்றவர் அடக்கி, ஒடுக்கி அமைதியான ஆட்சியை நிலைநிறுத்துவது முடியாத காரியமாகும். இன ஒற்றுமை மூலம், இணையாட்சிகள் மூலம் - நாட்டைக் கட்டியெழுப்புவதே மக்களாட்சிக்குச் சிறப்பாகும்.

'எப்பதம் வாய்த்திடுமேனும் நம்மில் யாவர்க்கும் அந்நிலை பொதுவாகும்' என்ற மனிதநேய அடிப்படையில் எமது கொள்கைகளும், திட்டங்களும் அமையவேண்டியது அவசியமாகும்.

குடியரசு என்று பட்டைநாமம் தீட்டிக்கொண்டு பத்தாம்பசலிக் கொள்கைகள் கொண்ட பேரினவாத அரசுகள், காலத்துக்குக்காலம் எடுத்த சிறுபான்மை மக்களுக்கு எதிரான - பாரபட்சமான தீர்மானங்களும், நடவடிக்கைகளும் இணைப்பாட்சிக்கு முடிவுகட்டி தனிநாட்டுக்கோரிக்கையை வலுவடையச் செய்ததை இன்னமும் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் காணப்பட்ட இணக்கங்கள் இதுவரை செயற்படுத்தப்படவில்லை. இதனால், தமிழ்மக்களின் இயல்புவாழ்க்கை இன்னமும் ஏற்படுவதாக இல்லை. படைத்தரப்பு புதிதுபுதிதாக காவலரண்கள் அமைத்துக்கொண்டு வருகிறது. இச்செயல் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

தாங்கமுடியாது, இனித்துயரத்தை - என்ற துயரத்தின் விளிம்பிலேயே எம்மக்கள் நின்று தவிக்கிறார்கள். நாட்டின் ஏனைய பகுதிகளைப்போல் படைமுகாம்கள் இல்லாத பிரதேசமாக எமது தமிழ்ப்பிரதேசங்களும் அமைக்கப்படவேண்டும்.

பொதுமக்களின் இயல்புவாழ்க்கைக்கும் சமாதானப் பயணத்திற்கும் இது இன்றியமையாதது. ஆகவே எமது மக்கள் தங்கள் வீடுகளில் சென்று குடியமரவும், படைத்தரப்பைத் தம்மிடத்திற்கு அனுப்பவும், துரிதமான முறையில் நடவடிக்கை எடுக்கப்படல்வேண்டும். இதற்கு முரணாக அமையும் எந்தநடவடிக்கையும் அடிப்படை உரிமை - அத்துமீறல்களாகவே கருதப்படும்.

பேரினவாதக் காட்டுக் கூச்சல்களுக்கு முக்கியமளித்தலும், படைத்தரப்பு ஆதிக்கத்திற்கு இடமளிப்பதும் ஒருவித ஜனநாயக விரோதச்செயல் என்பதோடு, இராணுவ ஆட்சிக்கு அத்திவாரமிடுவதாகவும் அமையும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# பக்தாத் சர்வதேச விமான நிலையமருகே கவசவாகனம் மீது பொறிவெடித் தாக்குதல்!

## அமெரிக்கப் படையினர் ஒருவர் பலி; இருவர் காயம்


ஈராக்கில் சோதனைக் கெடுபிடி

ஈராக் தலைநகர் பக்தாத்தில் - தாக்குதல் நடந்த இடத்திற்கு விரைந்து சென்ற அமெரிக்காவின் மரைன் படையினர் மீது நடத்தப் பட்ட திடீர் தாக்குதல் ஒன்றில் - ஒருவர் கொல்லப்பட்டதுடன் இருவர் காயமடைந்தனர்.

பக்தாத் சர்வதேச விமான நிலையத்திற்கு முன்பாக உள்ள வீதியில், அமெரிக்கப் படையின் கவசவாகன மொன்று சென்றபோது - வீதியில் இருந்த பொருளொன்று திடீரென வெடித்ததாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து - குறிப்பிட்ட வாகனம் வீதியிலிருந்து தூக்கியெறியப் பட்டு, பலதடவை புரண்டதாகவும், இச்சம்பவத்தில் ஈராக்கியப் பொதுமகன் ஒருவரது காரொன்றும் சேதமடைந்ததாகவும் அமெரிக்கப் படையதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை - தெற்கு ஈராக்கில் இரு தினங்களுக்கு முன்னர், ஆறு பிரிட்டிஷ் மிலிட்டரிப் பொலிஸார் கொல்லப்பட்ட தாக்குதல் நடந்த மஜார் அல்-கபீர் நகரில் - பிரிட்டிஷ் படைகள், மோப்ப நாய்கள் சகிதம் தொடர்ந்து தேடுதல் நடத்தி வருகின்றனர்.

ஷியா முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்தப் பகுதி மக்கள் - சட்டவிரோதமாக ஆயுதங்களை மறைத்து வைத்திருக்கின்றனரா என்பதை அறிவதற்கே இத்தேடுதல்கள் நடத்தப் படுகின்றன.

இத்தேடுதல் நடவடிக்கை - மக்களிடையே எதிர்ப்பையும் கோபத்தையும் கிளப்பியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - நேற்றிரவு முதல் இத்தேடுதல் நடவடிக்கைகள் நிறுத்தப்படலாமென, பிரிட்டிஷ் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

உலகவலம்


ஆப்கான் தலைநகர் காபூலில், மாதாந்தம் பெறும் நிவாரணத்தை வண்டியொன்றில் வைத்துத் தள்ளியபடி நகர்கின்றான் சிறுவனொருவன். அருகே அவனது விதவைத் தாயார்.

# அமெரிக்க அணு ஆலைகளில் பாதுகாப்புக் குறைபாடுகள்!

(வொஷிங்ரன்)

அமெரிக்காவிலுள்ள மிக முக்கியமான அணு ஆலைகளிலும், அணு ஆராய்ச்சி மையங்களிலும் - பெரும் பாதுகாப்புக் குறைபாடு நிலவுவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த அணு நிலையங்களில் - திருட்டுக்கள் பல்கிப் பெருகியிருப்பதாகவும் - அண்மையில், ஒரு அணு ஆராய்ச்சி நிலையமொன்றிலிருந்து வாகனம் ஒன்று களவாடப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

சந்தியா, லொஸ் அலாமொஸ் மற்றும் கலிபோர்னியாவிலுள்ள லோறன்ஸ் லிவர்மோல் ஆகிய இடங்களிலுள்ள மூன்று முக்கிய அணுவாயுத ஆராய்ச்சிக் கூடங்களும் - பாதுகாப்புக் குறைபாட்டுக் குற்றச்சாட்டுக்களுக்கு ஆளாகியிருக்கின்றன.

இதேவேளை - லொஸ் அலாமொஸ் அணுவாயுத ஆராய்ச்சி நிலையத்திலிருந்து, அதன் தலைவராக விளங்கியவர் - திருட்டு மற்றும் மோசடிக் குற்றச்சாட்டுக்காளாகி, இந்தவருட ஆரம்பத்தில் பதவிவிலகியதும் -

1999 ஆம் ஆண்டில் - தாய்வானைப் பிறப்பிடமாகக் கொண்ட வென் லீ என்ற விஞ்ஞானி அணுவாயுத இரகசியங்களைக் கடத்திச் சென்றதாகக் கூறப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# பலஸ்தீன போராளிக் குழுக்களை சமாதானப்படுத்த அரபாத் முயற்சி!



பலஸ்தீனப் போராளிக் குழுக்களான- ஹமாஸ், அல்-அக்சா, இஸ்லாமிய ஜிஹாத் ஆகியன இஸ்ரேலியர்களுக்கு எதிரான தாக்குதலைகளை நிறுத்துமென - பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத் தெரிவித்தார்.

ஆனால் - தாம் இவ்வாறான அறிவிப்பு எதனையும் விடுக்கப் போவதில்லை என, குறித்த குழுக்களின் உள்ளூர்த் தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

இஸ்ரேலியர்கள் தம் மீதான தாக்குதல்களை நிறுத்தும் வரை - நிரந்தரப் போர் நிறுத்தம் எதற்குமே இடமில்லையென, அவர்கள் கூறியுள்ளனர்.

பலஸ்தீனப் போராளிக்குழுக்கள், குறைந்தது மூன்று மாதங்களுக்காவது - தாக்குதல்களை நிறுத்த வேண்டுமென , பலஸ்தீனப் பிரதமர் மஹ்மூட் அப்பாஸூம் தொடர்ச்சியாக முயன்று வருகிறார்.

இதேவேளை - இஸ்ரேலியக் குடியிருப்புக்களுக்கும் மேற்குக் கரைக்கும் இடைப்பட்ட பகுதியில் இஸ்ரேலியர் ஒருவரும், இரண்டு பலஸ்தீனர்களும் நேற்று நடந்த புதிய கலவரங்களில் பலியாகியிருக்கின்றனர்.

# போருக்குப் பிந்திய புனர்நிர்மாணம்; ஈராக்கில் வெற்றியைத் தரவில்லை!

## அமெரிக்க உயரதிகாரி திமோதி கார்னி கருத்து

யுத்தத்திற்குப் பின்னர் - ஈராக்கில் திட்டமிடப்பட்ட புனர்நிர்மாணத் திட்டங்கள், எதிர்பார்த்தவகையில் முன்னேற்றகரமானதாக அமையவில்லையென - ஈராக்கில் புனர்நிர்மாணப் பணிகளுக்காக அனுப்பப் பட்ட, அமெரிக்காவின் சிரேஷ்ட அரச அதிகாரிகளில் ஒருவரான திமோதி கார்னி தெரிவித்தார்.

பல தரப்பினராலும் விமர்சனத்துக்குள்ளாகியிருக்கும், போருக்குப் பிந்திய ஈராக்கின் புனர்நிர்மாணத் திட்டங்களின் பின்னடைவுகளுக்கு - உரிய வளங்கள் இல்லாதது முக்கிய காரணமென அவர் கூறினார்.


வலுக்கும் எதிர்ப்பு

போருக்குப் பிந்திய செயற்பாடுகளில், பல வருட அனுபவத்தைக் கொண்ட திமோதி கார்னி - பக்தாத்தை விட்டுப் புறப்படுமுன்பாக, செய்தியாளர்களிடம் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

ஈராக் மக்களுக்கான உடனடி மனிதாபிமானப் பணிகளை வழங்குவதன் அவசியம் பற்றிக் கூறிய அவர்-

அமெரிக்கப் படையினர் தரப்பிலிருந்தும் புனர்நிர்மாணப் பணிகளுக்கு போதிய ஒத்துழைப்புக் கிடைப்பதில்லை என்றும் தெரிவித்தார்.

இதேவேளை - பாதுகாப்புக் குறைபாடும், தொலைத் தொடர்புகளை மேற்கொள்வதில் உள்ள சிக்கலும் - தமது பணிகளைப் பாதித்திருப்பதாகவும் திமோதி கார்னி தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க - பிரிட்டனின் சர்வதேச அபிவிருத்திக்கான அமைப்பின் செயலாளர் பரோனஸ் அமோஸூம், கார்னியின் கருத்துக்களை ஆமோதித்திருக்கிறார்.

தாம் - மின்சார, குடிநீர் வசதிகளை அமைத்துக்கொடுத்த சில மணி நேரங்களில், அவை ஈராக்கியர்களால் திருடப்பட்டுவிடுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

### இரும்புப் பெண்ணின் கணவன் மரணம்!

(லண்டன்)

பிரிட்டனின் முன்னாள் பிரதமர் மார்க்ரெட் தாட்சரின் கணவரான, சேர். டெனிஸ் தாட்சர் காலமானார்.

லண்டனிலுள்ள மருத்துவமனையொன்றில் மரணமான இவருக்கு வயது 88 ஆகும். 'இரும்புப் பெண் மணி' என அழைக்கப்பட்ட மார்க்ரெட் தாட்சரின் வெற்றிகளுக்கு டெனிஸ் தாட்சர் பெருமளவு ஒத்துழைப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஈராக்கிய கிராமத்தில் கதிரியக்க அச்சுறுத்தல்!

ஈராக்கில் ருவெய்கா நகரிலுள்ள அணுஆலை ஒன்றிலிருந்து வீசப்பட்ட கழிவுகள் மூலம், கதிரியக்கம் பரவலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது.

குறிப்பிட்ட அணு ஆலையிலிருந்து வெளியே வீசப்பட்ட 'மஞ்சள் கேக்' (Yellow Cake) என்ற யுரேனியக் கழிவுகள் - மக்களைத் தாக்கும் கதிரியக்கத்தைக் கொண்டவை என, சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கமான 'கிறீன் பீஸ்' அறிவித்துள்ளது.

இந்தக் கழிவுகள் மக்கள் புழங்கும் இடங்களில் காணப்படுவதால், இவற்றை உடனடியாக அகற்றுமாறு அமெரிக்க படையினரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதி மக்கள் உடனடியாக மருத்துவப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட வேண்டுமெனவும் - இதுபோன்ற சம்பவங்கள் பிரிட்டனிலோ அமெரிக்காவிலோ நடந்திருந்தால், அவர்கள் இப்படிக் கவனயீனமாக இருக்கமாட்டார்கள் என்று, 'கிறீன் பீஸ்' அமைப்பின் முக்கியஸ்தர் மைக் ரெனன்ஸ்லே கூறினார்.

ஏற்கனவே - இப்பகுதி மக்களிடையே திடீர் காய்ச்சலும், வயிற்றுளைவும் ஏற்பட்டிருப்பதாகவும், இவை கதிரியக்கத்தின் பிரதிபலிப்பாக இருக்கும் எனவும் ரெனன்ஸ்லே மேலும் தெரிவித்தார்.

ஈராக்கில் அமெரிக்கப் படைகள் உள்நுழைந்தபோது - இந்த அணு ஆலை உடைக்கப்பட்டு, அங்குள்ள பொருட்கள் திருடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# லைபீரியாவில் மோதலைத் தவிர்ப்பதற்கு அமெரிக்கா தலைமையில் அமைதிப்படை!

## ஐ.நா.சபைக்கு ஆலோசனை முன்வைப்பு

லைபீரியாவில் கடந்த சில நாட்களாக ஓய்ந்திருந்த மோதல்கள், நேற்றுமுன்தினம் முதல் மீண்டும் தீவிரமடைந்துள்ளன.

தலைநகருக்குள் போராளிகள் தமது தாக்குதல்களை ஆரம்பித்திருப்பதால் - ஆயிரக்கணக்கான உள்ளூர்வாசிகளும், வெளிநாட்டவர்களும் அங்கிருந்து வெளியேறி வருகின்றனர்.

தலைநகர் மொன்ரோவியா மீதான இத்தாக்குதல் - கடந்த ஒருவாரகால யுத்தநிறுத்தத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - லைபீரியாவில் நடக்கும் மோதல்களைத் தடுத்துநிறுத்த, அமெரிக்கா தலைமையிலான அமைதிகாப்புப் படை அங்கு அனுப்பிவைக்கப்பட வேண்டுமென, ஐ.நா.வுக்கான பிரிட்டிஷ் தூதுவர் சேர் ஜேர்மி கிறீன்ஸ்ரொக் ஆலோசனை வெளியிட்டிருக்கிறார்.

ஆனால் - மொன்ரோவியாவிலுள்ள அமெரிக்கத் தூதர் ஜோன் வில்லியம் பிளேனி - முதலில் இருதரப்பும் போரை நிறுத்தவேண்டியது அவசியம் எனக் கூறியிருக்கிறார்.

நேற்று நடந்த தாக்குதலில் - மொன்ரோவியாவிலுள்ள அமெரிக்கத் தூதரகமும் தாக்குதலுக்கிலக்கானது. இதன்போது மூன்று உள்ளூர்வாசிகள் பலியாகினர்.

இதேவேளை - நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக, லைபீரியாவின் அயல்நாடான கானாவில் - தொடர்ந்தும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. அங்கு - லைபீரிய போராளிக் குழுக்களின் இணைப்பாளர்களோடு, ஐ.நா. தூதுக்குழு ஒன்று பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது.

இது இவ்வாறிருக்க - தலைநகர் மொன்ரோவியாவின் முக்கிய பாலமொன்றைப் போராளிகள் தகர்த்துவிட்டதாகவும் - நகர் முழுவதும் ஷெல் மழை பொழிவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றிரவும் - இத்தாக்குதல்கள் தொடர்ந்தவண்ணம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

# இதய நோய் தடுக்க புதிய மாத்திரை!



55 வயதுக்கு மேலுள்ள ஒவ்வொருவருக்கும், இதயநோய் பாதிப்பிருந்தால் - அவர்களுக்கு உதவவென புதிய மாத்திரையொன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

அஸ்பிரின் மற்றும் கொலஸ்ரோலைக் கட்டுப்படுத்தும் மருந்து, ஃபோமிக் அமிலம் ஆகியவற்றைக் கொண்டு இந்தப் புதிய மாத்திரை உருவாகியிருக்கிறது.

'பொலிபில்' (Polypill) என அழைக்கப்படும் இந்த மாத்திரை பிரிட்டனில் அறிமுகமாயிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அரியாலையில் மிதிவெடிகள் அகற்றியபோது மனித எலும்புக்கூடு, எச்சங்கள் கண்டெடுப்பு!

நெடுங்குளம் சந்தியில் மனித எலும்புக்கூடொன்றும், வேறு மனித எலும்புகளின் எச்சங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அரியாலைப் பகுதியில் - கண்டி வீதி, நெடுங்குளச்சந்திக்கு அருகாமையில் மேற்படி எலும்புக்கூடுகளும் எச்சங்களும் கண்டெடுக்கப்பட்டன.

'ஹலோ ட்ரஸ்ற்' கண்ணிவெடி அகற்றும் குழுவினர் - அரியாலைப் பகுதியிலுள்ள கண்டி வீதியின் இரு மருங்கிலும் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது, நேற்றுக்காலை அப்பகுதியில் - ஒரு முழுமையான நிலையில் மனித எலும்புக்கூடொன்றும், வேறு சில மனித எலும்புக்கூட்டின் எச்சங்களும் கண்டெடுக்கப்பட்டன.

இது குறித்து கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டவர்கள், அப்பகுதிப் பொலிஸ் பொறுப்பதிகாரிக்குத் தெரியப்படுத்தினர்.

பொலிசார் உடனடியாக, இச்சம்பவத்தை யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.ரி. விக்னராஜாவிற்கு தெரிவித்தனர்.

நேற்றுக் காலை 9 மணியளவில்- யாழ். மாவட்ட நீதிபதி, சம்பவ இடத்திற்கு விஜயம் செய்து, எலும்புக்கூடுகளும் எச்சங்களும் காணப்பட்ட பிரதேசத்தைப் பார்வையிட்டார்.

அத்துடன், இப்பகுதியில் கண்ணிவெடிகளை விரைவாக அகற்றி, வேறும் எச்சங்கள் ஏதும் இருப்பின் அவற்றையும் மீட்கும்படி - அப்பகுதி பொலிஸ் அதிகாரிக்கு யாழ். நீதிபதி உத்தரவிட்டார்.

எலும்புக்கூடு மற்றும் எலும்புக்கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்ட பின்னர், அவை உரிய தடயவியல் பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (லி)

# எங்கள் உரிமையினை வலியுறுத்தி பொங்கு தமிழில் ஒன்றிணைவோம்!

## வண. பிதா பேணாட் அடிகள் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

"பொங்கியெழும் தமிழ்மக்களின் தன்மான உணர்ச்சியையும், உரிமை வேட்கையையும் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு மூலமாக வெளிப்படுத்துவோம்"

இவ்வாறு யாழ்.மாவட்ட நீதி-சமாதான ஆணைக்குழுவின் தலைவர் வணபிதா அ.சி.பேணாட் அடிகளார் தெரிவித்தார்.

இன்றைய 'பொங்கு தமிழ்' நிகழ்வையொட்டி, அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரை நூற்றாண்டுக்கு மேலாக, தமிழ் மக்கள் உரிமை மறுப்பினால் ஒடுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, உடல், உளச் சுமைகளைச் சுமந்ததும் போதும், பிறர் அதைச் சுமத்தியதும் போதும்.

சொந்த மண்ணில் சுதந்திரமாக வாழ நமக்குள்ள உரிமையை மறுப்போர் உணர்ந்து மதிக்கட்டும். அனைத்துலக சமூகமும் அதனை அங்கீகரிக்கட்டும்.

தமிழ் மக்கள் யாவரும் - தம் கூட்டுப்பொறுப்பை உணர்ந்தவர்களாய் இந்நிகழ்வில் பங்குபற்றுவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

அமைதி அறத்தைப் பேணி, "பொங்கு தமிழ் -2003" விழாவில் கலந்து சிறப்பிக்கும்படி அனைவரையும் கோருகிறோம் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# கப்பல் தகர்ப்புப் பற்றி இன்று கண்காணிப்புக்குழு அறிக்கை

விடுதலைப் புலிகளின் கப்பல், சர்வதேசக்கடலில் இலங்கை கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் அறிக்கை, இன்று வெள்ளிக்கிழமை வெளியிடப்படும் என்று யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பிரதித்தலைவர் ஹக்ரப் ஹொாக்லண்ட் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- கப்பலில் இருந்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 12 விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் தொடர்பாக எவ்வித தடயமும் கிடைக்கவில்லை என்றும் கூறினார்.

## அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளை முன்னெடுப்பதற்காக - மக்கள் பணிமன்ன ஒன்று, இன்று காலை 9 மணிக்கு யாழ்.நகரில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படவுள்ளது.

# புலிகள் வசமுள்ள கடற்படையினரை கண்காணிப்பாளர்கள் சந்தித்தனர்!

திருமலையில் - விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்ட மூன்று கடற்படையினரையும், நேற்று யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

திருகோணமலையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் உள் நுழைந்தபோது - மான்பாய்ந்த வெளியில் இரு கடற்படையினரும், பாலம்போட்ட ஆற்றடியில் ஒரு கடற்படையினரும், புலிகளால் கைது செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே.

இவர்கள் மூவரையும் சம்பூரிலிலுள்ள விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியற்துறைச் செயலகத்தில் வைத்து, திருகோணமலை மாவட்ட கண்காணிப்புக்குழுவினர் நேற்றுப் பார்வையிட்டனர். (04,10)

## அமைச்சர்...

வருகைதரவுள்ளனர்.

நேற்றைய தினமும் பத்திரிகையாளர்கள் பலர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்திருந்தனர். இவர்களை விட, பல்வேறு ஊடகங்களின் படப்பிடிப்பாளர்களும் இன்று யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளனர்.

French Film Festival : 2003
பிரான்சிய திரைப்பட விழா 2003



யாழ் பலகலைக்கழக கைலாசபதி கலையரங்கில்
(ஆங்கில உபதலைப்புக்களுடன்)

28.06.2003- மாலை 3.30 - 6.30
29.06.2003- காலை 10.00 -12.30
மாலை 3.30 - 7.30
30.06.2003- மாலை 4.30 - 8.00
01.06.2003- மாலை 4.30 - 8.00

சிறுவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்

யாழ்ரன் மல்ரி சென்ரர்
48, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# புதிதாக 79 பேர் சமாதான நீதவான் பதவிக்கு நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் - சமாதான நீதவான் பதவிக்கு மேலும் 79 பேர் நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி சமாதான நீதிவான்கள் பதவிக்கான சிபார்சுகளை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் வழங்கியிருந்தார்.

புதிய சமாதான நீதிவான்களான நியமனம் பெற்றவர்களுக்கான, நியமனக் கடிதங்கள், இன்று இந்து கலாசார அமைச்சின் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பொங்கு தமிழுக்கு...

நடந்து கொள்ளாமல், மேற்படி நிகழ்வுக்கு ஒத்துழைப்பு வழங்கும்படி கோரிக்கை விடுத்தனர்.

இதற்குப் பதிலளித்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் விதாரண, பொலிஸார் எவ்வகையிலும் இந்த நிகழ்வுக்கு இடையூறாகச் செயற்பட மாட்டார்கள் என்றும், பொலிஸாரின் வழமையான ரோந்து நடவடிக்கைகள் மட்டுமே நடைபெறும் என்றும் மேலதிகப் பணி எதுவும் மேற்கொள்ளப்படாது என்றும், கலகம் அடக்கும் பொலிஸ் பிரிவு அப்பகுதிக்கு வெளியிலேயே நிறுத்தி வைக்கப்படுவார்கள் என்றும், மக்களுக்கு இடைஞ்சலாகக் கருதின் இப்பிரிவும் அங்கிருந்து அகற்றப்படும் என்றும் தெரிவித்தார்.

மேலும் - இவ்விடயம் குறித்து யாழ். பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவுடனும் பிரதிப்பொலிஸ் மா அதிபர் தொடர்புகொண்டு உரையாடினார். பொதுமக்களுக்கு இடையூறுகள் ஏற்படாதவகையில் இராணுவத்தினர் செயற்படுவார்கள் என்று யாழ். பிராந்திய இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அப்போது தெரிவித்தார்.

இதேவேளை- பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணாண்டோ- யாழ் படைத்தளபதியிடமும், ஏனைய இராணுவ அதிகாரிகளிடமும் இன்றைய 'பொங்கு தமிழ்' சுமுகமாக நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டதாகவும் தெரியவருகிறது. (க)

SPOKEN ENGLISH WITH GRAMMAR
LECTURES BY:
MR.M.A.HARI
4 ஆவது புதிய பிரிவு ஆரம்பம்
29.06.2003 சனி மாலை 4.30 மணி
SATURDAY, SUNDAY 4.30 p.m - 5.30 p.m
DIRECTOR
HARY'S INSTITUTE
இல. 564, கஸ்தூரியார் வீதி,
(யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகில்),
யாழ்ப்பாணம்.
(சி/1118)

## வரலாறு காணாத எழுச்சி...

அனைத்திலும் 'மக்கள் நலன் புரிச் சங்கமும் படையணியும்' என்ற அமைப்பைச் சேர்ந்த தொண்டர்கள் ஈடுபடுவர்.

இன்றைய நிகழ்வில், கலந்து கொள்ளும் மக்களுக்கான போக்குவரத்து ஏற்பாடுகள் அனைத்தும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி நடைபெறும். அனைத்து மக்களையும் நிகழ்வு முடிவடைந்த பின்னர் உடனடியாக வாகனங்களில் வீடுகளுக்கு அனுப்பிவைப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்றைய தினம் நடைபெறவுள்ள நிகழ்வு- அமைதியாகவும், சிறப்பாகவும் நடைபெற அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமெனவும், இந்த நிகழ்வில் கலந்துகொள்ளும் இளைஞர், யுவதிகள் அமைதியையும், பொறுமையையும் கடைப்பிடித்து ஒத்துழைக்கவேண்டுமெனவும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுக்கொண்டுள்ளது.

அதேவேளை - இன்றைய தினம் குடாநாட்டிலுள்ள அரச, அரச சார்பற்ற தனியார் நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டிருக்கும்.

பொது நிறுவனங்கள் மற்றும் மனிநேய அமைப்புக்கள், கல்வி நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், வர்த்தகச் சங்கங்கள், சமய நிறுவனங்கள், மாணவர் அமைப்புக்கள், மக்கள் நலன்புரி மன்றங்கள் உட்பட அனைத்துத் தரப்புக்களும் இன்றைய 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுக்கு தமது பூரண ஆதரவை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இராணுவ புலனாய்வாளர்...

வித்துள்ளமை தொடர்பாக கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில் -

இதுபோன்ற கொலைகள் தொடர்பாக பூரணமான விசாரணைகள் நடத்தப்படவேண்டும். கொழும்பில இரு முக்கிய தேசிய அரசியல் கட்சிகளுக்கிடையே கடுமையான போட்டி நிலவுகின்றது. அரசியல் ரீதியான கொலைகளும் இடம்பெறுகின்றன. பாதாளக் கோஷ்டியினரிடையேயும் மோதல்கள் இடம்பெறுகின்றன. இந்நிலையில் சமீப காலமாக தென்பகுதியில் இடம்பெறுகின்ற கொலைகள் பற்றி பூரணமான விசாரணைகள் நடத்தப்படாமல் நாம் எவர் மீதும் குற்றம் சுமத்தமுடியாது. யாரையும் நிரபராதிகள் எனவும் கூறமுடியாது. அத்துடன் இந்த கொலைகள் தொடர்பாக நோர்வே முழுமையான முறையில் கருத்துக் கூறவும் முடியாது. எனவேதான்- இந்த விடயத்தில் பொறுமையாகவும் நிதானமாகவும் நாம் செயற்பட வேண்டிய தேவையுள்ளது எனத் தெரிவித்தார்

## பொங்கு தமிழ்...

'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்ச்சிகள் நேரடியாக அஞ்சல் செய்யப்படவுள்ளன. யாழ்ப்பாணத்திலும் இந்த ஒலிபரப்பைத் தெளிவாகக் கேட்கக்கூடியதாக இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## அரசின் வரைபு இரு...

நிலைமைகளை நீக்குவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகள் தொடர்பாகவும், லண்டனில் நடத்தியுள்ள பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவும், இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் விளக்கிக் கூறினார்.

அரசாங்கம் அடுத்த இரண்டு வார காலப் பகுதிக்குள், நோர்வே மத்தியஸ்த்தர்கள் மூலமாக முன்வைக்கவுள்ள யோசனைகள் தொடாபாக, விடுதலைப் புலிகளிடமிருந்து கிடைக்கக்கூடிய பிரதிபலிப்புக்களைப் பொறுத்தே, சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கக் கூடியதாக இருக்கும் எனவும் தெரிவித்த அவர்,

தற்போது அரசாங்கம் தயாரித்துள்ள யோசனைகளின் விபரங்களை வெளியிடவில்லை. அதே வேளையில், இந்த யோசனைகளைப் பரிசீலனை செய்வதற்கு தாம் தயாராகவிருப்பதாக, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நோர்வேயிடம் உறுதியளித்துள்ளதாகத் தெரிவித்தார்.

அரசாங்கம் தயாரித்துள்ள இந்த யோசனைகள் இறுதியானவையல்ல எனவும், இது ஒரு ஆரம்ப வரைவுதான் எனவும் தெரிவித்த அமைச்சர் பீரிஸ், இந்த யோசனைகள் தொடர்பான தமது திருத்தங்களை விடுதலைப் புலிகள் முன்வைக்கலாம் எனவும், அவற்றையிட்டு பேசித் தீர்த்துக்கொள்ளலாம் எனவும் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாகம் ஒன்றை அமைப்பது தொடர்பான அரசாங்கத்தின் முடிவு பற்றி ஜனாதிபதிக்கு பிரதமர் தெரிவிப்பார் எனவும் ஊடகவியலாளர்களிடம் குறிப்பிட்ட அமைச்சர்,லண்டனுக்குத் தாம் மேற்கொண்ட விஜயம் மிகவும் பயனுள்ளதாக இருந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

லண்டன் விஜயத்தின்போது - இடைக்கால நிர்வாக சபையை அமைப்பது தொடர்பான சட்டச் சிக்கல்கள் பற்றியும், இதில் பிரித்தானியாவின் அனுபவங்கள் தொடர்பாகவும் இலங்கைக்குழு ஆராய்ந்ததாகவும் அமைச்சர் பீரிஸ் கூறினார்.

அதேவேளை - இலங்கையில் இப்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு, முதலீடுகளை மேற்கொள்வதற்கு பிரித்தானிய தொழிலதிபர்கள் பலர் முன்வந்திருப்பதாகவும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார். தற்போது பங்குச் சந்தை விலைகள் உயர்வடைந்து வருவதையிட்டு அவர்கள் திருப்தியடைந்துள்ளார்கள் எனவும், இந்த நிலைமையில் முதலீடு செய்வதையிட்டு அவர்கள் மிகுந்த நம்பிக்கையுடனிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## திருமலையில் புலிகளின்...

இராணுவத்தினர் ஏற்கமறுத்த னர். இதனால் இருதரப்பினருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது. அச்சமயம் படையினரால் கிரனேட் ஒன்றும் வீசப்பட்டது.

அதேவேளை - மேற்படி சம்பவம் தொடர்பாக உடனடியாக திருகோணமலை மாவட்ட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கும் புலிகளால் தெரியப்படுத்தப்பட்டது.

கண்காணிப்புக்குழு சம்பவ இடத்திற்கு வருவதற்கு முன்னர் - இராணுவத்தினர் மேலும் முன்னேற முயன்றவேளை, எச்சரிக்கும் நோக்குடன், ஆகாயத்தை நோக்கி புலிகள் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டனர்.இதனையடுத்தே, அப்பகுதியிலிருந்து படையினர் பின்வாங்கித் தமது நிலைகளுக்கு திரும்பினர்.

சம்பவ இடத்திற்கு வந்துசேர்ந்த கண்காணிப்புக்குழுவினர், நிலைமையை நேரில் அவதானித்தனர். இராணுவத்தினரின் இந்த அத்துமீறல்பற்றி, கண்காணிப்புக்குழுவினரிடம் விடுதலைப் புலிகள் புகார் செய்ததுடன் - இதுபோன்ற சம்பவங்களை அனுமதிக்கமுடியாது எனவும் எடுத்துரைத்தனர். (4,10)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.06.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.